Registered as a News paper
பக்கங்கள் 10
விலை 07/=

# ஈழநாதம்

Eezhanatham

மட்டக்களப்பு பதிப்பு
மக்கள் நாளிதழ்

மின்னியல், இலத்திரனியல்
உபகரணங்கள் பெறுவதற்கு OR
பழுதுபார்க்க, பாடல்கள், படங்கள், ஒலி, ஒளி
நாடா, இசை தட்டுக்கள் பெறுவதற்கு நாட
வேண்டிய இடம்
T.V.R. ELECTRONIC'S
NO 88/1
DOCTOR LANE
KALUWANCHIKUDI.
காட்சியறை
T.V.R SONY SHOW ROOM
பிரதான வீதி,
(மக்கள் வங்கி அருகாமை)
களுவாஞ்சிகுடி

நாதம் 01 திருவள்ளுவர் ஆண்டு 2035 மாசி 03 15.02.2005 செவ்வாய்க்கிழமை ஓசை 249

# சிங்களப் பேரினவாதத்தின் சதியே தமிழ் முஸ்லிம் உறவைப் பிளந்தது

## உறவைப் பலப்படுத்தும் ஒன்று கூடலில் தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

(நமது நிருபர்)

**பேரினவாதிகளின் நீண்ட காலத் திட்டத்தின் அடிப்படையில் தமிழ் முஸ்லிம் மக்களது உறவுகள் பிளக்கப்பட்டது. தற்போது இந்த சமாதான காலத்தில் இரு தரப்பு உறவுகளையும் கட்டியெழுப்ப வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.**

இவ்வாறு தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்

(தொடர்ச்சி 10ம் பக்கம்)



## அடையாளம் காணப்பட்டது.

(சர்வவேஸ்வரன்)

திருக்கோவில் பிரதேச சாவாறு எனும் இடத்தில் இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டு எரிக்கப்பட்ட நிலையில் காணப்பட்டவரின் சடலம் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

துறைநீலாவணையைச் சே

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

## விடுதலைப்புலிகள் முஸ்லிம்களையும் சமமாக வழி நடத்த வேண்டும்

### சட்டத்தரணி அப்துல் ஜபாத்

(நமது நிருபர்)

ஆரம்ப கால வரலாறுகளை நாங்கள் மறந்தவர்கள் அல்ல. காலத்தின் போக்கு எங்களுடைய உறவிலே பல விரிசல்களையும், பல பிளவுகளையும் ஏற்படுத்தியது.

இவ்வாறு நேற்று கொக்கட்டிச்சோலையில் நடைபெற்ற சந்திப்பின் போது காத்தான்குடி பள்ளி வா்ய ல்களின் தலைவர் சட்டத்தரணி அப்துல் ஜபாத் தெரிவித்தார். ஒன்றை மட்டும் நாங்கள் சொல்லிக் கொள்ள விரும்புகின்றோம். தமிழ் போராளிகளோடு தோளோடு தோள் நின்று போராடாமல் இருந்திருக்கலாம். எங்களில் மிகச் சிலர் இந்த அமைப்பிலே

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

## வெல்லாவெளியில் கண்டனப் பேரணி

(நமது நிருபர்)

லெப்.கேணல் கௌசல்யன் உட்பட நான்கு போராளிகள், மற்றும் மாமனிதர் சந்திரநேரு மீதான படுகொலையை கண்டித்து நேற்று வெல்லாவெளிப் பிரதேச மக்களால் மாபெரும் கண்டனப் பேரணி நடாத்தப்பட்டது.

வெல்லாவெளிப் பிரதேச

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

## முஸ்லிம்களின் கோரிக்கைகளை விடுதலைப் புலிகள் உணர்ந்துள்ளனர்.

(நமது நிருபர்)

-ஐ.எம்.இப்றாகிம்-

பேரினவாதச் சக்திகள் முஸ்லிம் சமூகத்திற்கிடையேயும் விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கிடையேயும் பாரிய விரிசலை ஏற்படுத்தியது. ஆனால் அதில் அவர்கள் வெற்றி கொள்ள முடியவில்லை முஸ்லிம்களின் உணர்வுகள் நியாயமான கோரிக்கைகளை விடுதலைப் புலிகள் உணர்ந்திருக்கின்றார்கள். இதனையிட்டு முஸ்லிம் சமூகத்தினரான நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம்.

இவ்வாறு நேற்று கொக்கட்டிச்சோலையில் நடைபெற்ற விடுதலைப்புலிகளுக்கும் முஸ்லிம் பிரதிநிகளுக்கும் இடையிலான சந்திப்பில்

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

## சிட்னி நகரில் நினைவு கூரல்

(நமது நிருபர்)

லெப். கேணல் கௌசல்யனினதும் சக போராளிகளினதும், மாமனிதர் சந்திரநேரு அரியநாயம் அவர்களினதும் நினைவுகூரும் நிகழ்ச்சிக்கூட்டம் ஞாயிற்றுக்கிழமை அவுஸ்திரேலியா சிட்னி நகரில் மிகவும் உணர்வுபூர்வமாக நடைபெற்றது.

இந் நினைவுகூரும் நிகழ்ச்சிக் கூட்ட நிகழ்வில் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் சிட்னி பணிப்பாளர் கு.சஞ்சயன் பொதுச்சுடரை ஏற்றி ஆரம்பித்து வைக்க மாவீரன் மேஜர் சலீம் பிரின்ஸ்ரனனின் சகோதரி சோனா பிரின்சும், மேஜர் வின்ச

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

## அக்கரைப்பற்றில் அதிரடிப் படை போராளிகளை மறித்து சோதனை

(சர்வேஸ்வரன்)

மட்டக்களப்பிலிருந்து திருக்கோவில் நோக்கிச் சென்று கொண்டிருந்த போராளிகளை நேற்று முன்தினம் அக்கரைப்பற்றில் விசேட அதிரடிப் படையினர் தடுத்து நிறுத்தி உடல் பரிசோதனைக்கு உட்படுத்தினர்.

நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் அக்கரைப்பற்று விசேட அதிரடிப்படை முகாம் முன்னால் இவர்களது வாகனத்தைத் தடுத்து நிறுத்திய விசேட அதிரடிப் படையினர் ஆண் போராளிகள் 6 பேரையும், உடல் பரிசோதனை செய்து விட்டு அங்கிருந்த 10 பெண் போராளிகளையும் சோதனையிட முயன்றனர்.

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

## கோமாரியில் சிறுமி மரணம்

(சர்வவேஸ்வரன்)

சுனாமி அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டு கண்டி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று குணமடைந்திருந்த கோமாரியைச் சேர்ந்த சிறுமியொருவர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார். கோமாரியைச் சேர்ந்த யோகராசா டெல்சிகா (வயது 07) எனும் சிறுமியே உயிரிழந்தவராவார். சுனாமியால் பாதிக்கப்பட்டு கண்டி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று பூரண குணமடைந்து வீட்டிலிருந்த வேளை காய்ச்சல் காரணமாக மட்டக்களப்பு போதனா வைத்தியசா

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

## கௌசல்யன், சந்திரநேரு மீதான தாக்குதலை கண்டித்து கொக்கட்டிச்சோலையில் ஆர்ப்பாட்டம்

(நமது நிருபர்)

மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் லெப் கேணல் கௌசல்யன் உட்பட நான்கு போராளிகள் மற்றும் மு.பா.உ மாமனிதர் சந்திரநேரு மீதான தாக்குதலைக் கண்டித்து இன்று கொக்கட்டிச்சோலைப் பகுதியில் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியொன்று நடைபெறவுள்ளது.

பட்டிப்பளை பிரதேச வா்த்

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

## சுனாமி குழந்தையின் உண்மை பெற்றோர் மரபணு மூலம் கண்டுபிடிப்பு

(துஷி)

கல்முனையில் சா்ச்சையை ஏற்படுத்திய சுனாமிக் குழந்தையின் பெற்றோர் ஜெயராஜ் ஜுனிற்றா தம்பதிகளே என மரபணுப் பரிசோதனை மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

இதனை நேற்று கல்முனை மாவட்ட நீதிபதி எம்.பி.முகைதீன் பகிரங்கமாக அறிவித்துள்ளார். இதனைத் தொடர்ந்து குழந்தைக்கு உரிமை கோரிய உண்மைப் பெற்றோர் மற்றும் கல்முனை ஆதார வைத்தியசாலை அத்தியட்சகர் அவர்களையும் எதிர்வரும் புதன்கிழமை நீதிமன்றில் ஆஜராகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் புதன்கிழமை குழந்தைக்கான இறுதித் தீர்ப்பு வழங்கப்பட்டு குழந்தை உண்மைப் பெற்றோர்களான ஜெயராஜ், ஜுனிற்றா தம்பதிகளிடம் கையளிக்கப்படவுள்ளது.



முஸ்லிம் பிரதிநிதிகளுடன் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன், கட்டளைத் தளபதி கேணல் பானு.

## இன்றைய நாளில்

**லெப்.கேணல் பொன்னம்மான் அற்புதன் (யோகரத்தினம் குகன்) கலட்டி யாழ் (25.12.1956-14.02.1987)**



விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினரான பொன்னம்மான், ஆயிரக்கணக்கான புலிவீரர்கள் உருவாக்கப்பட்ட இராணுவப் பயிற்சிப் பாசறைக்கு பொறுப்பாக இருந்ததுடன் இராணுவ தொழிநுட்பப் பணியிலும் பெரும் பங்காற்றியவராவார். கைதடியில் நிகழ்ந்த வெடி விபத்தில் மேஜர் கேடில்ஸ், கப்டன் வாசு இன்னும் 07 தோழர்களுடன் வீரச்சாவடைந்தார்.

## செய்தித் துளிகள்

### ஆசிரியர் நியமனம்

(நமது நிருபர்)

தேசிய கல்வியல் கல்லூரியிலிருந்து தேசிய டிப்ளோமாவைப் பெற்ற 1600 பேருக்கு இன்று 15ம் திகதி தொடக்கம் ஆசிரியர் நியமனம் வழங்குவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

தேசிய பாடசாலைகளுக்கு நியமனம் செய்யப்பட்டவர்களுக்கான கடிதங்கள் நேரடியாகவும் மாகாணப் பாடசாலைகளுக்கு நியமனம் செய்யப்பட்டவர்களின் கடிதங்கள் மாகாணக் கல்வி செயலாளர்களுக்கூடாகவும் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், விளையாட்டு, ஆரம்பப் பிரிவு போன்ற துறைகளில் தமிழ், சிங்களம் ஆகிய மொழிகள் மூலம் டிப்ளோமா பெற்றவர்களுக்கு இவ்வாறு இந்நியமனம் வழங்கப்பட்டிருக்கின்றது.

### பணிப்புறக்கணிப்பு

(நமது நிருபர்)

இலங்கையின் பேரூந்துக் கம்பனி பலவற்றின் ஊழியர்கள் பலர் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அரசாங்கத்தினால் அதிகரிக்கப்பட்ட 2500 ரூபா சம்பள உயர்வைக் கோரியே போக்குவரத்து ஊழியர்கள் இந்தப் பணிப்புறக்கணிப்பில் பங்கு கொண்டுள்ளனர்.

இதற்கிடையே இலங்கைப் போக்குவரத்துச் சபையின் தலைவர் கூறும் போது:- இது சம்மந்தமான எதுவித முன்னறிவித்தலும் கொடுக்கவில்லை. ஆனாலும் இந்த அதிகரிப்பை பெற்றுக் கொடுக்க நிதியமைச்சு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது என்றார்.

### மக்கள் கோரிக்கை

(நமது நிருபர்)

வவுணதீவுப் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள புதுமண்டபத்தடி கிராம சந்தையிலிருந்து கரையாக்கன்தீவு கிராமம் வரை செல்லும் பிரதான பாதையினைப் புனரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மிக நீண்ட காலமாக குன்றும், குழிவுமாகக் காணப்படும் இவ்வீதியின் சீர் கேட்டால் இவ்வீதியால் பிரயாணம் செய்வோர் தினமும் பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

மாரிகாலத்தில் இப்பாதையிலுள்ள குழிகள் நிரம்பிக் காணப்படும் நீரினால் வீதி குளம் போல் காட்சியளிக்கும். இதனால் மக்கள் தங்கள் பயணங்களை மேற்கொள்ள முடியாமல் பல அசௌகரியங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

எனவே சம்மந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் எடுத்து இவ்வீதியினை கிறவல் இட்டு புனரமைத்து தார் வீதியாக மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அக்கோரிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### விவசாயிகள் விசனம்

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட நெற்காணிகளின் விபரங்கள் சில வட்டைச் சேவையாளர்களினால் சரியான முறையில் தகவல் சேகரிக்கப்படவில்லை என பாதிக்கப்பட்ட விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்லாயிரக் கணக்கான நெல் வயல்கள் நீரில் மூழ்கி பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் விவசாயிகள் பாரிய நஷ்டத்தினை எதிர் கொண்டனர்.

கமநல சேவைகள் நிலையத்தினூடாக அரசினால் கோரப்பட்டிருந்த பாதிக்கப்பட்ட விவசாயிகளின் விபரம் திரட்டும் நடவடிக்கையில் சில வட்டைச் சேவையாளர்கள் அசமந்தமாக நடந்து கொண்டதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர். எனவே உரிய முறையில் பாதிப்புற்ற விபரங்களை வட்டைச் சேவையாளர்கள் சேகரித்து அனுப்புமாறும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

# அமெரிக்காவுக்கு கப்பல் பயிற்சிக்கு சென்ற படையினர் ஐவர் மாயம்

## படை வட்டாரங்களில் பரபரப்பு

(நமது நிருபர்)

சிறிலங்கா கடற்படைக்கு அமெரிக்கா வழங்கியுள்ள யுத்தக்கப்பலில் பணியாற்றுவதற்கென பயிற்சிபெறுவதற்கு அமெரிக்கா சென்ற சிறிலங்கா கடற்படையினர் ஐவர் அமெரிக்காவில் காணாமல் போயுள்ளனர்.

அமெரிக்காவால் சிறிலங்காவுக்கு வழங்கப்பட்டுள்ள 'கறேஜஸ்' இந்தக்கப்பல் இவ்வாரம் சிறிலங்காவை நோக்கிப்புறப்படுகிறது. இது தொடர்பான நிகழ்வில் கலந்துகொள்ள கடற்படைத்தளபதி தயா சந்தகிரி அமெரிக்காவுக்கு செல்ல திட்டமிட்டிருந்தபோதும் கௌசல்யன் படுகொலைக்குப்பின்னர் அரச மட்டத்தில் தோன்றியுள்ள யுத்த பீதியை அடுத்து சந்தகிரி தனது பயணத்தை ரத்து செய்துவிட்டு கடற்படையிலிருந்து இன்னொரு அதிகாரியை அமெரிக்காவுக்கு அனுப்பியுள்ளார்.

அமெரிக்காவினால் உதவாத பொருளாக ஒதுக்கப்பட்ட இந்த யுத்தக்கப்பலுக்கு, இந்தியாவிடமிருந்து சிறிலங்கா பெற்றுக்கொண்ட 'சயுர' விலிருந்து கழற்றப்பட்ட 1936ம் ஆண்டு எதிர்ப்பு ஏவுகணைகளைப் பொருத்தும் பணிகள் அண்மைக்காலமாக நடைபெற்றது.

தற்போது அந்தப்பணிகள் உட்பட 69 கோடி ரூபா செலவில் புதுப்பிக்கும் வேலைகள் அனைத்தும் நிறைவுபெற்றுவிட்டதை அடுத்து கப்பலை சிறிலங்காவுக்கு கொண்டுவரும் வேலைகள் நடைபெறுகின்றன.

இந்தக்கப்பலில் பணியாற்றுவதற்கென சிறிலங்கா கடற்படையினரிலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஒரு தொகுதியினருக்கு பயிற்சியளித்து வருகின்றனர்.

அந்தத்தொகுதியிலிருந்தே ஐவர் காணாமல்போயுள்ளனர். இவர்களில் கப்பலின் இயந்திர அறை உத்தியோகத்தர் ஒருவர் என்று தெரிவிக்கப்படுகிறது. காணாமல் போனோர் அமெரிக்காவில் எந்தப்பகுதிக்குள் ஓடித்தப்பினர் என்று அறிய முடியாதுள்ளதாக படை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# தமிழின் பூர்வீக கிராமங்களுக்கு செல்ல முடியாத அளவு பாதுகாப்பு வலய நெருக்கடி

(நமது நிருபர்)

மீள்குடியேற்ற பிரதேசமாக ஓமந்தை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. பூர்வீக கிராமங்களுக்கு செல்லமுடியாதளவிற்கு உயர்பாதுகாப்பு வலயம் பெரும் தடையாகவுள்ளது என ஓமந்தை பிரதேச புனர்வாழ்வுக்கழக தலைவர் வி.துரைராசா மாவட்ட அரச் அதிபரிடமும் வன்னி மாவட்டநாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் முறையிட்டுள்ளார்.

இறம்பைக்குளம்-ஓமந்தை வீதி, இளமருதன்குளம்-ஓமந்தை வீதி ஆகியவை இன்னமும் திறக்கப்படாது மூடப்பட்டுக் கிடக்கின்றன. போர் நிறுத்த உடன்பாடு அமுலில் உள்ளபோதிலும் இந்த நெருக்கடி தொடர்கிறது.

"பூர்வீக கிராமங்களான அரசன்குளம், பூதர்குளம், விளாத்திக்குளம் ஆகிய இடங்களில் நிறைய வளங்கள் உள்ளன. ஆனால் இந்த கிராமங்களில் மக்கள் குடியமர உயர்பாதுகாப்பு வலயம் தடையாகவுள்ளது.

மக்களை குடியமர அனுமதித்தால் நிறைய வேளாண்மை செய்யமுடியும். பொருளாதாரம் மேலும் விருத்தி அடைய வாய்ப்புக்கள் உள்ளன"- என புனர்வாழ்வுக் கழக தலைவர் அரச அதிபருக்கும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பிவைத்துள்ள மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

வன்னி மாவட்ட பாதுகாப்பு படைகளின் தளபதிகளுடன் கலந்துரையாடி உயர்பாதுகாப்பு வலயத்தில் மக்களை குடியமர்த்த நடவடிக்கை எடுக்குமாறு அவர் வேண்டியுள்ளார்.

# ஜே.வி.பி விரும்பினால் அரசிலிருந்து விலகலாம் சவால் விடுகிறார் சந்திரிகா

(நமது நிருபர்)

அரசாங்கத்தில் அங்கம் வகித்துக் கொண்டு வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு காண குறுக்கே நிற்கும் கட்சிகள் விரும்பினால் அரசாங்கத்திலிருந்து விலகிப் போகலாம் என சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க நேற்று முன்தினம் தனது அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பி. போன்ற கட்சிகளுக்கு பகிரங்கமாக அறிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் அத்தனகலயில் பலநோக்கு கூட்டுறவுச் சங்க கட்டடமொன்றை திறந்து வைத்து உரையாற்றிய அவர், ஜே.வி.பி.யின் போக்குக்குறித்து பெயர் குறிப்பிடாமல் கடுமையான முறையில் விமர்சனம் செய்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஓரிரு கட்சிகள் சிறிய விடயங்களுக்குக்கூட விலகி விடப் போவதாக எச்சரிக்கை விடுக்கின்றார்கள். விரும்பினால் அவர்கள் போகட்டும்.

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் நாட்டில் ஒரு துண்டை பிரித்து தனிநாடு உருவாக்க வேண்டுமா? மக்களே சிந்தியுங்கள்.

இதனை நான் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க முயலும்போது அரசாங்கத்தில் உள்ள சில கட்சிகள் ஒரு சொல் பிழைத்தாலும் அரசாங்கத்திலிருந்து விலகி விடுவோம் என்கின்றார்கள். போக விரும்பினால் போகட்டும். இப்படியானவர்களை வைத்துக் கொண்டு ஆட்சி செய்ய முடியாது.

தீர்வுகாண முயலும்போது, இல்லை, இந்தச் சொல்லைப் போட வேண்டாம், அந்தச் சொல்லைப் போடு. ஒரு எழுத்துப் பிழை வந்தாலும் அதை நீக்கிவிட்டு இந்த எழுத்தைப்போடு என்றெல்லாம் குழப்புகின்றார்கள்.

நண்பர்களே இது ஒரு கேலிக்கூத்து. பேச்சுவார்த்தை முதலில் ஆரம்பிக்கப்பட வேண்டும். எமது அரசாங்கத்திலிருப்பவர்கள் என்னைத்தான் முதலில் கொல்ல வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார்கள்.

நான் இனிமேல் கடுமையாக நடந்து கொள்ளவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. நான் வீடு செல்ல முன்பு பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டும். இதற்கு எனக்கு மக்கள் ஆதரவு இருந்தால்போதும் என்று கூறியுள்ளார்.

# புலிகளிடம் புது வகை ஏவுகணையாம் படைத்துறை அவிழ்த்துள்ள புதுக்கதை

(நமது நிருபர்)

விடுதலைப்புலிகளிடம் விமானப்படை உள்ளது என்றும், விமான ஓடுபாதையுள்ளது என்றும் கடந்த சில வாரங்களாக ஊடகங்களைப் பரபரப்பாக்கிய சிறிலங்கா படைத்துறை தற்போது புலிகளிடம் ஒரு மர்மமான விமான எதிர்ப்பு ஏவுகணை உள்ளதாக புதுக்கதை ஒன்றை புகையவிட்டிருக்கிறது.

விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யனின் இறுதி நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்காக திருகோணமலை மாவட்ட கட்டளைத்தளபதி சொர்ணத்தை ஏற்றி வருவதற்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சிக்குச் சென்ற சிறிலங்கா விமானப்படையின் உலங்கு வானூர்தியின் விமானி செய்த முறைப்பாட்டிலிருந்து இவ்விடயம் தெரியவந்துள்ளதாக படைத்துறை வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றின் எழுத்தாளர் தகவல் வெளியிட்டுள்ளார்.

ஹிங்குராங்கொடயிலிருந்து வன்னி நோக்கிச் சென்ற மேற்படி உலங்குவானூர்தி வவுனியாவில் இறங்கி எரிபொருள் நிரப்பிவிட்டு ஏ-9 பாதைக்கு மேலாகப்பறந்து கிளிநொச்சியை அண்மிக்கும் வேளையில், உலங்குவானூர்தியில் பொருத்தப்பட்டிருந்த விமான எதிர்ப்பு ஏவுகணை தாக்காமல் இருப்பதற்காக பொருத்தப்பட்டிருந்த விசேட கருவிகள் திடீரென தொழிற்பட ஆரம்பித்துவிட்டதாக அவ்விமானி தெரிவித்துள்ளார் என்றும், இந்த விசேட இலத்திரனியல் கருவி செக்கனுக்கு 17 என்ற அதிர்வில் செயற்பட்டதாகவும் கிளிநொச்சியில் தரையிறங்கி கேணல் சொர்ணத்தை ஏற்றிக்கொண்டு வரும் போதும் குறிப்பிட்ட இடத்துக்கு மேலாகப் பறக்கும்போது அந்த எச்சரிக்கைக்கருவிகள் செயற்ப்பட்டதாகவும் அவ் விமானியை மேற்கோள் காட்டி தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இவ் எச்சரிக்கை தொழில்நுட்பக்கோளாறு காரணமாக ஏற்பட்டதா அல்லது விமானி இது விடயத்தில் கதை விடுகிறாரா என்பவை பற்றி விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மன்னாரிலும் இன்று மாபெரும் கண்டனப் பேரணி

(நமது நிருபர்)

மன்னாரில் இன்று செவ்வாய்க்கிழமை பொது அமைப்புக்கள் இணைந்து மேற்கொள்ளும் கண்டனப் பேரணி நடைபெறவுள்ளது. மூன்று விடயங்களை கண்டித்து இந்த பேரணி நடைபெறவுள்ளதாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இந்தப் பேரணியில் கலந்துகொள்வார்கள் எனவும் அவர் கூறினார்.

மட்டு.- அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் குழுவினர் படுகொலை, விடுதலைப்புலிகளின் மன்னார் அரசியல் துறை அலுவலகம் மீது நடத்தப்பட்ட கைக்குண்டு வீச்சுத் தாக்குதல் மற்றும் தாழ்வுப்பாட்டில் கடந்த வெள்ளிக்கிழமை இளைஞர் ஒருவர் பொலிசாரினால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டமை போன்ற விடயங்களை கண்டித்தே இந்த கண்டனப்பேரணி மன்னார் நகரில் நடைபெறவுள்ளது.

அரசாங்க அதிபரிடமும், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு பிரதிநிதிகளிடமும் மனுக்கள் கையளிக்கப்படவுள்ளன.


நேற்று முன்தினம் மன்னாருக்கு வருகை தந்த வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிவநாதன் கிஷோர், சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் தாக்குதலுக்குள்ளான புலிகளின் மன்னார் அரசியல் துறை அலுவலகத்தை பார்வையிட்டதுடன் வன்னி மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபருடனும் கலந்துரையாடலை நடத்தியிருந்தனர். தாக்குதல் குறித்து விசாரணை நடத்திவருவதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# ஆயுதக் கும்பல் உண்ணா விரதம்

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டு மொனராகலை சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள அரச ஆதரவு ஆயுதக் குழுவைச் சேர்ந்த நான்கு பேர் தங்கள் விடுதலையைக் கோரி உண்ணாவிரதமொன்றை ஆரம்பித்துள்ளனர்.

சிறைச்சாலை கூரைமேல் ஏறிஅமர்ந்து நேற்று இதனை ஆரம்பித்துள்ளனர். மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து இவர்கள் பாதுகாப்பிற்காக இந்த சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டவர்கள் சிறிலங்கா சிறைச்சாலை விளக்க மறியலில் தற்போது இருக்கின்றனர்.


மட்டு அம்பாறை தமிழீழ மருத்துவப் பிரிவின் ஏற்பாட்டில் நோர்வே தமிழ் சுகாதார அமைப்பினரால் நேற்று இலவச வைத்திய முகாம் கரவெட்டியில் நடைபெற்றது. இதில் பல நூற்றுக்கணக்கான பொது மக்களும் பாடசாலை மாணவர்களும் கலந்து கொண்டு சிகிச்சைகளைப் பெற்றுக் கொண்டதையும், வைத்தியக் குழுவினையும் படத்தில் காணலாம்.

படம்:- மாறன்.

# சிறிலங்கா அரசும், போர் நிறுத்தக் கண்காணிப்பு குழுவினரும் நடவடிக்கை எடுக்கத் தவறி விட்டனர்.

## மட் / காந்தி சேவா சங்க செயலாளர் கதிர் பாரதிதாசன்

(நமது நிருபர்)

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதன் பின் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இடம் பெற்ற யுத்த நிறுத்த மீறல்களுக்கு இலங்கை அரசாங்கமும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறி விட்டது.

இவ்வாறு மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட முன்னாள் பிரஜைகள் குழு செயலாளரும், மட்டக்களப்பு மாவட்ட காந்தி சேவா சங்க செயலாளருமான கதிர்பாரதிதாசன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில், பல தடவைகள் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் யுத்த நிறுத்தம் மீறப்பட்டுள்ளன.

இதற்கான திடமான ஒரு நடவடிக்கையினை அரசோ போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவோ மேற்கொள்ளவில்லை.

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுத்தம் காரணமாகவே புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்படுவதற்கும், போர் நிறுத்தமும் சமாதான சூழ்நிலை தோன்றுவதற்கும் காரணமாக அமைந்தது. ஆனால் நிராயுதபாணிகளாக இராணுவக் கட்டுப்பாட்டு பகுதிக்குள் பிரவேசிக்கும் விடுதலைப்புலி உறுப்பினர்கள், மற்றும் பொது மக்கள் படுகொலை செய்யப்படுகின்றனர். இதற்கான முழுப் பொறுப்பையும் அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும்.

இந்நிலை தொடர்வது போர் நிறுத்தமும், சமாதான சூழ்நிலையும் சீகுலைவதற்கே வழிவகுக்கும். இராணுவக் கட்டுப்பாட்டு பகுதிகளில் எதிர்காலத்தில் யுத்த நிறுதத மீறல்கள் ஏற்படாதிருக்க அரசாங்கமும், போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவும் உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சுனாமியால் பாதிக்கப்பட்ட வைத்தியசாலைகள் தற்காலிகமாக இயங்குகின்றன.

(எஸ்.ரவீந்திரன்)

கடந்த சுனாமி அனர்த்தத்தினால் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் பல வைத்தியசாலைகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன. இவை தற்போது தற்காலிகமாக இயங்கி வருகின்றது. மருதமுனை சுற்றயற்கூறு வைத்தியசாலை மருதமுனை மக்கள் மண்டபத்தில் இயங்கி வருகின்றது.

காரைதீவு சுற்றயற்கூறு வைத்தியசாலை காரைதீவு கமநல சேவைகள் திணைக்களத்திலும் இயங்கி வருகின்றது.

கல்லாறு மாவட்ட வைத்தியசாலை அதே இடத்தி லேயே தற்காலிகமாக இயங்கி வருகின்றது. பெரிய நீலாவணை மத்திய மருந்தகம் தனியார் கட்டடத்தில் இயங்கி வருகின்றது குறிப்பிடத்தக்கது.

# சீன அரசின் உதவியுடன் இரு மீன் பிடிப் படகுத்துறை

(றிஸ்வானுல் ஜன்னா)

சாய்ந்தமருது, அறுகம்பை ஆகிய இடங்களில்இரண்டு மீன்பிடி படகுத்துறைகள் சீன அரசாங்கத்தின் உதவியுடன் கடற்றொழில் நீரியல் வள அமைச்சு அமைக்கத் திட்டமிட்டுள்ளது.

சுனாமி அனர்த்தம் காரணமாக அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசத்தில் பாதிப்புக்குள்ளான மீன் பிடித் தொழிலை மீளக் கட்டியெழுப்பும் நோக்கில் இந்த இரண்டு மீன்பிடிப் படகுத்துறைகளும் அமைக்கப்படவுள்ளன. ஒவ்வொன்றும் 50 மில்லியன் ரூபா செலவில் நிர்மானிக்கப்படவிருக்கும் இம் மீன்பிடிப் படகுத்துறைக்கு அருகில் மீன்களை பதனிடும் ஐஸ் தொழிற்சாலைளை அமைக்கவும் திட்டமிடப்பட்டிருக்கின்றது. இது தவீர கல்முனைப் பிரதேசத்தில் அழிந்து போயுள்ள மீன்பிடி படகுகள், தோணிகள் என்பனவற்றிற்குப் பதிலாக புதிய மீன்பிடி படகுகளும், பிளாஸ்டிக் கண்ணாடி இழை தோணிகளும் வழங்க கடற்றொழில் நீரியல் வள அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

# உள நிலையை மாற்ற பல்வேறு செயற்திட்டங்கள்

(எஸ்.ரவீந்திரன்)

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் உள நிலையை மாற்ற பல்வேறு செயற்திட்டங்களை அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் மேற்கொண்டு வருகின்றன. களுவாஞ்சிகுடியில் நோர்வே சுகாதார அமைப்பினால் சுகாதார விழிப்புணர்வு, திரைப்படம், நடனம், பாடல் நிகழ்ச்சிகள் போன்ற வைகள் களுவாஞ்சிகுடி நலன்புரி நிலைய மக்களுடன் சேர்ந்து நடாத்தப்பட்டது.

பல மணி நேரம் இம்மக்களின் உளவியல்கள் மாறுபட்டதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

# விடுபட்ட கிராமங்களுக்கு மின்சாரம் வழங்குமாறு வேண்டுகோள்

(நமது நிருபர்)

வவுணதீவுப் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மண்டபத்தடி, கரையாக்கன்தீவு, கொத்தியாபுலை, இலுப்படிச்சேனை, வாழைக்காலை, காஞ்சுரங்குடா போன்ற கிராமங்களுக்குமின்சாரம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பொது மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மிக நீண்ட காலமாக இக் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் மின்சாரம் இன்றி பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

குப்பி விளக்கின் மூலமே இருளைப் போக்கி ஒளியைப் பெற்று வருகின்றனர். குப்பி விளக்கின் பாவனையால் பல சந்தர்ப்பங்களில் தீ விபத்துக்கள் கூட ஏற்பட்டிருக்கின்றன. அத்துடன் மாலையானதும் கிராமங்கள் இருளில் மூழ்கிக் காணப்படுவதால் திருடர்களின் தொல்லையும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

பாடசாலை மாணவர்கள் தமது இரவு நேரப் படிப்பினை குப்பி விளக்கிலிருந்து நீண்ட நேரம் வரை பயில முடியாமல் இடை நடுவில் நிறுத்தி விடுகின்றனர்.

இதனால் அவர்களின் கல்வியிலும் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. பல தடவைகளில் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலருக்கு இது சம்மந்தமாக தெரிவித்தும் இது வரை எதுவித நடவடிக்கையும் எடுக்க வில்லை. எனவே சம்மந்தப்பட்ட அதிகாரிகளே இது விடயத்தில் கவனம் எடுத்து எமது கிராமங்களுக்கு மின்சாரம் வழங்க உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அவ் வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மருத்துவ முகாம்.

(எஸ்.ரவீந்திரன்)

நோர்வே தமிழர் சுகாதார அமைப்பு, நோர்வே நல்வாழ்வு அபிவிருத்தி நிறுவனம், கனடா மருத்துவக்குழு, யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள் இணைந்து நடாத்திய மருத்துவ முகாம் வவுணதீவில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இருதய சிகிச்சை நிபுணர் டாக்டர் டயஸ் டலிமாவின் தலைமையிலான 25 மருத்துவர்கள் இம்முகாமில் கலந்து கொண்டனர்.

# சுனாமியால்பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கு விசேட வட்டியில்லா முற்பணம் வழங்கல்.

(றிஸ்வானுல் ஜன்னா)

கடல் கொந்தளிப்பினால் ஏற்பட்ட அனர்த்தங்கள், இழப்புக்கள் என்பனவற்றுக்கு உள்ளான வீடுகள், சொத்துக்கள், தனிநபர் தொடர்பில் கரையோர மாவட்டங்களில் உள்ள குறிப்பிட்ட பிரதேச வயலகங்களில் வசிக்கும் அரச உத்தியோகத்தருக்கு வட்டியில்லாத விசேட முற்பணத்தை வழங்குவதற்கான சுற்றறிக்கை தற்போது வெளியிடப்பட்டிருக்கின்றது.

அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் (01/25) வெளியிடப்பட்டுள்ள இச்சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வீடுகள், மற்றும் வீட்டுப் பொருட்கள் போன்றவற்றுக்கு ஏற்பட்ட அனர்த்தங்களின் மதிப்பீடானது உத்தியோக மதிப்பீட்டுத் தொகையோ அல்லது உத்தியோகத்தருடன் 12 மாதங்களின் வேதனத் தொகையோ மதிப்பிடப்பட்டு அதில் எது குறைவானதோ அது விசேட கடனாக வழங்கப்படும்.

இக்கடனானது உத்தியோகத்தர் ஒருவருக்கு அல்லது குடும்ப உறுப்பினர்களுக்கு அல்லது அவருடைய சட்ட ரீதியான வாழ்க்கைத் துணைவிக்கு அவர்கள் வசித்து வந்த வீடுகளுக்கு, வீட்டுப் பொருட்களுக்கு ஏற்பட்ட அனர்த்தங்களைச் சீர் செய்யும் நோக்கத்திற்காக வழங்கப்படும்.

உத்தியோகத்தருக்கு உருத்தான அத்தியாவசிய பொருட்களானது அவருடைய வசிப்பிடமும், சொத்தும் எதுவித அனர்த்தங்களுக்கும் உட்படாமல் அழிக்கப்பட்டு அல்லது இழக்கப்பட்டு இருக்குமிடத்து இப்பொருட்களை கொள்வனவு செய்யும் நோக்கத்திற்காக விசேட கடனாக 50 ஆயிரம் ரூபா வழங்கப்படும்.

இப்படி முற்பணமாகப் பெறப்படும் தொகையானது 50 ஆயிரம் ரூபா அல்லது அத்தியாவசிய பொருட்களின் விலை என்பனவற்றில் எது குறைவானதோ அத்தொகையாக இருக்கும்படி மட்டுப்படுத்தப்படும்.

இந்தக் கடனானது 12 மாதங்களின் வேதனத் தொகையை முற்பணமாக் பெற்றுக் கொள்ளாத அனர்த்தத்திற்கு உட்பட்ட உத்தியோகத்தர்களுக்கு மட்டுமே வழங்கப்படும். இது வட்டியில்லாத கடனாக இருக்கும். இந்தக் கடனானது 60 சமமான மாதந்தத் தவணைக் கட்டணங்களாக உத்தியோகத்தருடைய வேதனத்திலிருந்து மீளப்பெறப்படும்.

உத்தியோகத்தரது ஓய்வூதியத்திற்கு முன்பு மொத்தத் தொகையையும் முழுமையாக மீளப் பெறமுடியாது இருக்குமிடத்து உத்தியோகத்தரின் ஓய்வூதியப் பணிக்கொடையிலிருந்து மீளப் பெற்றுக் கொள்ளப்படும். இதற்கும் முடியாத சாத்தியக்கூறு இருக்குமிடத்து அவருடைய மாதாந்த ஓய்வூதியப் பணத்திலிருந்து மீளப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

இக்கடனுக்கென கிராம சேவகர், தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஆகியோர்களின் அறிக்கையுடன் பிரதேச செயலாளரின் சிபாரிசும் பெற்று விண்ணப்பிக்க வேண்டும்.

இந்தக் கடனானது 3 மாத தவணைக் கொடுப்பனவாக வழங்கப்படும் 2005.06.30 ஆம் திகதிக்கு முன்பு இந்த விசேட முற்பணக் கொடுப்பனவானது கொடுக்க முடிவுறுத்தப்படுதல் வேண்டும்.

இதற்கு பின்னர் பெறப்படும். விண்ணப்பங்களுக்கு கொடுப்பனவு வழங்கப்பட மாட்டாது எனவும் அச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

# கரவெட்டியில் இலவச வைத்திய முகாம்.

(மாறன்)


மட்டு அம்பாறை தமிழீழ மருத்துவப் பிரிவின் ஏற்பாட்டில் நோர்வே தமிழர் சுகாதார அமைப்பினரால் இலவச வைத்திய முகாம் நேற்று கரவெட்டியில் நடைபெற்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு அம்பாறை மருத்துவப் பொறுப்பாளர் ரவிமோகன் தலைமையில் நடைபெற்ற இவ் வைத்திய முகாமில் நோர்வே தமிழர் சுகாதார அமைப்பு, நோர்வே நல்வாழ்வு அபிவிருத்தி நிறுவனம், கனடா மருத்துவக்குழு, பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள் ஆகியோர் இணைந்து சேவையினை நடாத்தினர்.

இதில் நூற்றுக்கணக்கான பொது மக்கள் கலந்து கொண்டு சிகிச்சைகளைப் பெற்றனர்.

# தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் தன்னையே அர்ப்பணித்த மாமனிதர் சந்திரநேரு

## தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டுத்துறை பொறுப்பாளர் கரிகாலன்



(நமது நிருபர்)

இராணுவத்தினரின் சதித் திட்டத்தினால் வெலிக்கந்தைப் பகுதியில் 07.02.2005 படுகாயமடைந்த நிலையில் கொழும்பு வைத்திய சாலையில் செவ்வாய்க்கிழமை அதிகாலை உயிர்நீத்த அம்பாறை மாவட்ட முன்னாள் பாராளு மன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திர நேருவின் பூதவுடல் சனிக்கி ழமை தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவ மரியாதையுடன் பாவட்டாவில் அஞ்சலி நிகழ்வு இடம் பெற்றது. இதன் போது நினைவுரை ஆற்றிய தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுத்துறை பொறுப்பாளர் கரிகாலன் உரையாற்றும் போது அவர் தனது உரையில்:-

கப்பலில் கப்டனாக இருந்த காலத்தில் கரைசேர முடியாமல் தவித்தவர்களை கரைசேர்த்தவர் இந்த மாமனிதர் சந்திரநேரு தமிழ் மக்களின் துன்பத்தில் இருந்து அவர்களை கரைசேர்த்ததுடன் விடுதலைப்போராட்டத்தில் தன்னையே அர்ப்பணித்த மாமனிதர் இவர் அம்பாறை மாவட்ட மக்களு க்கு மட்டுமல்ல முழுத் தமிழ்த் தேசத்திற்கும் ஒரு பேரிழப்பாகும். தமிழ் மக்களுக்காக,ஈழத்திற்காக அறப்போர் நடத்தியவர். சத்தியா க்கிரகம் ,பாதயாத்திரைகள் போன்ற பல போராட்டங்களை நடத்தியவர் இவரின் தந்தை அறப்போராட்ட 'அணியின் தலைவர் அரியநாயகம். தந்தையின் வழியில் சென்று தமிழ் மக்களுக்காய் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்காக பாராளுமன்றம் சென்று தமிழருக்காய் ஓங்கிக் குரல் கொடுத்த அஞ்சா நெஞ்சன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு தனக்கு இன்று பாராளுமன்ற ஆசனம் இல்லாவிட்டாலும் தமிழ் மக்களு க்காய் சகல விதத்திலும் போராடியவர் அது மட்டுமல்லாது தமிழுக்காய் போராட பதவி தேவையில்லை என்று நிரூபித்த மகான் எமது தேசியத்தலைவரினால் விடுதலைப்போராட்டத்திற்காய் அவர் எழுப்பிய குரலை , இவரது தன்ன லமற்ற சேவையை மதித்து இன்று மாமனிதர் என்ற பட்டம் வழங்கப்படுமளவிற்கு நேருவின் சேவை மகத்தானது. தொடர்ந்து உரை யாற்றிய தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டுத் துறைப்பொறுப்பாளர் கரிகாலன் அவர்கள்

மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் லெப்.கேணல் கௌசல்யன் இந்த மாமனிதர் சந்திரநேரு உட்பட ஏனைய போராளிகளினது வீரச்சாவுகளினால் விடுதலைப் போராட்டத்தை நசுக்கி விடலாம் என நினைத்து விடவேண்டாம். இவர்களின் இவ் இழப்புக்களால் எங்களது போராட்டத்தை வலுப்படுத்தியுள்ளது. முன்னரைவிட மக்கள் மத்தியில் விடுதலை உணர்வை அதிகரிக்கச் செய்துள்ளது. எமது போராட வேண்டும் என்ற உணர்வை உயர்த்தியுள்ளது என்றார்.

# பல்கலைக்கழகத்திற்கான மாணவர் தெரிவு முறையில் மாற்றம்

(நமது நிருபர்)

பல்கலைக்கழகத்திற்கான மாணவர்களை தெரிவு செய்யும் முறையில் மாற்றங்களை கொண்டு வருவது குறித்து சிறிலங்கா அரசின் கவனம் திரும்பியுள்ளது. கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்குப் பின்னர் மாணவர்களை பல்கலைக்கழகத்திற்கு அனுமதிப்பதற்கு முன்னர் மற்றுமொரு பரீட்சை நடத்துவது என்பதிலேயே அரசு கவனம் செலுத்தி வருவதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் ரெட்நாயக்கா தெரிவித்தார்.

தேசிய கல்வி ஆணைக் குழுவின் ஊடகப் பல்க லைக்கழக மானிய ஆணைக்குழுவிற்கு இந்த யோசனைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் பேராசிரியர் ரெட்நாயக்கா தெரிவித்துள்ளார்.இவ் யோசனையின் அடிப்படையில் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த சகல மாணவர்களுக்கும் மற்றுமொரு பரீட்சை நடத்துவதற்கு ஆலோசிக்கப் பட்டுள்ளது. இது குறித்த பேச்சுவார்த்தைகள் தற்போது இடம் பெற்று வருவதாக பல்கலைக்கழக மானிய உப தலைவர் கூறினார்.

## வைத்திய பரிசோதனை

(நந்தபாலு)

சுனாமி கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களுக்காக ஹிந்துசேவா சங்கத்தினரால் இலவச வைத்திய பரிசோதனைகள் நடைபெற்று வருகின்றது. அண்மையில் திருக்கோவில் -04 மண்டானை,கோமாரி போன்ற நலன்புரி நிலையங்களில் நடைபெற்றது இதன் மூலம் பல மக்கள் பயனடைந்துள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.



பொத்துவில் பிரதேசத்தில் நல்ல வசதியாக வசித்து வந்த குடும்பங்களின் வீடுகள் சுனாமி அனர்த்தத்தால் ஒரு நொடிப்பொழுதில் சின்னாபின்னமாக்கப்பட்டிருப்பதனைப் படத்தில் காணலாம் (படமும் தகவலும்:– வி.பி சிவப்பிரகாசம் )

# குடிவரவு குடியகல்வு சட்டத்தை திருத்துவதற்கு சிறிலங்கா அரசு முடிவு

(நமது நிருபர்)

குடிவரவு, குடியகல்வு சட்டத்தை மீறுவோருக்கு கடுமை யான தண்டனையை விதிக்கும் நோக்குடன் குடியகல்வு சட்டத்தில் திருத்தம் கொண்டு வர சிறிலங்கா அரசு கவனம் செலுத்திவருகின்றது. தற்போது நடைமுறையிலுள்ள இந்த சட்டத்திற்குப் பதிலாக புதிய சட்ட மூலமொன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நீதியமைச்சர் ஜோன்செனவிரெட்ன தீர்மானித்துள்ளார். சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்கு ஆட்களை அனுப்பும் செயற்பாடுகளுக்கு குறைந்த பட்சம் 5 வருடம் முதல் 20 வருடகால சிறைத்தண்டனையை விதிப்பதற்கான உத்தேச சட்டயோசனைகள் முன் வைக்கப்பட்டுள்ளன.

இதற்கு மேலதிகமாக ஆட்களை வெளிநாடுகளுக்கு அழைத்துச் செல்வோர்களின் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால் அதற்குச் சிறைத்தண்டனையும் விதிப்பதற்குரிய யோசனையும் முன்வைக்கப்பட்டுள்ளது.

# பொலநறுவையில் துப்பாக்கிச் சூடு ஒருவர் பலி

பொலநறுவை கல்லல்ல பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். இனம் தெரியாத குழுவொன்று இந்தத் துப்பாக்கிச்சூட்டை நடத்தியுள்ளதாக பொலிசார் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை எற்றல் கோட்டைப் பகுதியில் இனந்தெரியாதோர் நடத்திய துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதோடு மற்றொருவர் காயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். வெல்லக்கோ பொலிஸ் பிரிவில் பொலிசாரின் கட்டளையை மீறி ஒருவர் மீது பொலிசார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தின் போது காயமடைந்த ஒருவர் தொடர்ந்து கொழும்பு தேசிய வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

# வேள்ட் விஷன் நிறுவனத்தால் நிவாரணப் பொருட்கள்

(நமது நிருபர்)

சுனாமி அனர்தத்தினால் பாதிக்கப்பட்ட அம்பாறை மாவட்டத்தின் பல்வேறுபட்ட கிராம மக்களுக்கும் உலக தரிசனத்தினரால் அரிசி, பருப்பு டின்மீன், சீனி, தேயிலை, மற்றும் சோயாமீற், விஸ்கற் என்பன வழங்கப்பட்டன.

திருக்கோவில் பிரதேசத்தில் கனகர்நகர், 30 ஏக்கா மீனவர் கிராமமக்கள் 300 பேருக்கும் தம்பட்டை 90 குடும்பத்திற்கும் பொத்துவில் பிரதேசத்தின் சின்ன உல்லையில் 400 குடும்பத்திற்கும், சர்வோதயபுரத்தில் 427 குடும்பத்திற்கும் பொத்துவில்களப்புக்கட்டில் 49 குடும்பத்திற்கும் மற்றும் பாண்டிருப்பு-01ல் 69 குடும்பத்திற்கும் பாண்டிருப்பு 02,03,ல் 427 குடும்பத்திற்கும் , அக்கரைப்பற்றில் 40ம் கட்டையில் 49 குடும்பத்திற்கும் இதுவரை வழங்கப்பட்டுள்ளதுடன் ஏனைய கிராம மக்களுக்கும் வழங்கப்படவுள்ளது. இதில் மூவின மக்களுக்கும் உதவிகள் கிடைக்கப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# மலசலகூட வசதியின்றி மக்கள் அவலம்

(நமது நிருபர்)

சுனாமியினால் பாதிக்கப்பட்டு பல்வேறு நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் மக்கள் தற்போது திருக்கோவில் -04 மண்டானைத் திடலில் குடியேறி வருகின்றனர்.

இதில் கூடுதலான மக்கள் தங்கியுள்ளதனால் மலசலகூடப் பற்றாக்குறை , குடிநீர் வசதி போன்றன குறைவாகவுள்ளதனால் மக்கள் திண்டாடுவதுடன் இன்னும் சில நீர்த் தாங்கிகளை வைத்து நீர் வசதிகளை பொது அமைப்புக்கள் , அரச சார்பற்ற நிறுவனங்கள் உரிய அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும் என மக்கள் தெரிவிக்கின்றனர்.

# சுனாமியால் சேதமடைந்த வைத்தியசாலைகளை புனரமைக்க 193 கோடி ரூபாய் தேவை

(நமது நிருபர்)

சுனாமிப் பேரலையின் தாக்கத்தால் அம்பாறை மாவட்டத்தின் சுகாதாரத்துறை பெரிதும் பாதிப்படைந்துள்ளது.

இயற்கை அனர்த்தம் காரணமாகச் சேதமடைந்திருந்த வைத்திய சாலைகள் தற்போது தற்காலிக இடங்களிலேயே இயங்கி வருகின்றன. இந்த மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட வைத்தியசாலைகளை மீளக்கட்டியெழுப்புவதற்கு 193 கோடி ரூபாய் தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மாவட்டத்தில் நிந்தவூர், சாய்ந்தமருது ஆகிய வைத்தியசாலைகள் பெரிதும் பாதிக்கப்பட்டன. மருதமுனை, காரைதீவு, போன்ற சுற்றயல் வைத்தியசாலைகளும் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. இதனால் மக்கள் பல சிரமங்க ளுக்கு மத்தியில் தமது வைத்திய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கின்றனர்.

# மண்டானைத் திடலில் மக்கள் குடியேற்றம்

(நந்தபாலு)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு இதுவரை காலமும் விநாயகபுரம் சக்தி வித்தியாலயயம், காயத்திரி கிராமம் அ.த.க. பாடசாலை, நெசவு பாலர் பாடசாலை போன்றவற்றில் தங்கியிருந்த திருக்கோவில் பிரதேசத்தின் விநாயகபுரக் கிராம மக்கள்திருக் கோவில் -04 மண்டானைத் திடலில் கூடாரங்களை அமைத்து குடியேறியுள்ளனர். மண்டபத்திடலில் கூடுதலான மக்கள் கூடாரங்களில் தங்கியுள்ளதால் தொடர்ந்தும் குடியேறி வருவதால் சுகாதாரக் குறைபாடுகள் ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளது.

# மனித உரிமை மீறல்கள் தொடர்பான மனுத்தாக்கலில் கடந்த ஆண்டு வீழ்ச்சி

(நமது நிருபர்)

அடிப்படை உரிமை மீறல்கள் தொடர்பாக உயர்நீதிமன்றத்தில் கடந்த ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் எண்ணிகையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் பாரிய மாற்றமென உயர் நீதிமன்ற ஆணைக்குழு பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

2004ம் அண்டில் 626 அடிப்படை உரிமை மீறல்கள் தொடர்பான மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டதாக அவர் தெரிவித்தார். இந்த எண்ணிக்கை 2003ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட 680 மனுக்களை விட சென்ற ஆண்டு 54 மனுக்களால் குறைவடைந்துள்ளது. கடந்த ஆண்டில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களில் அதிகமானவை பொலிஸ் சேவையில் வழங்கப்பட்ட பதவி உயர்வு தொடர்பாகவே அமைந்திருந்தன.

# இந்து சேவா சங்கத்தினரால் பாலர் பாடசாலைகள் நிர்மாணிப்பு

(நந்தபாலு)

சுனாமியினால் பாதிக்கப்பட்டு திருக்கோவில் பிரதேசத்தின் தம்பட்டை, திருக்கோவில்-04 மண்டானை, சகல கலை அம்மன்திடல், முற்றத்தொட்டப் பாலத்திடல் மற்றும் கோமாரி போன்ற நலன்புரிநிலையங்களில் உள்ள பாலர்களின் கல்வியை மேம்படுத்தும் பொருட்டு ஹிந்து சேவா சங்கத்தினரால் பாலர் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன இப்பாலர் பாடசாலைக்கு சர்வோதய அமைப்பினரும் அனுசரணை வழங்கி வருகின்றனர்.

# மலையக இளைஞர்களால் மட்டக்களப்பில் சிரமதானம்


சுனாமியால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு காத்தான்குடிப் பகுதியில் மலையக இளைஞர்களால் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.ஐ.தே. கட்சியின் ஆலோசனைக்கமைய இப்பணியினை பிரதேச சபைத் தலைவா எச்.எம்.சிறிவர்த்தன மேற்கொண்டார். இச் சிரமதானப் பணியில் கண்டி பன்விலதோட்ட இளைஞர்கள் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

# கற்பித்தலில் மீளவலியுறுத்தல்




கற்றல்,கற்பித்தல் கருமத் தொடரை வலுவடையச் செய்ய கற்பித்தலில் ஆசிரியர் பயன்படுததும் நுட்ப முறை

யின் ஆசிரியரின் அக்கணிப்பை எதிர்பார்க்கும். பிள்ளை தனது நேரான துலங்கலை வெளிப்படுத்தும்.




யே மீளவலியுறுத்தலாகும். கற்றலுக்கான உடல்-உள ஆயத்த நிலையை ஏற்படுத்துவதற்கான தூண்டியே மீள வலியுறுத்தல் எனக் கூற முடியும்.

மாணவர்களிடையே ஏற்படும் உடல், உளச் சோர்வினை நீக்கி கற்றல் செயற்பாடுகளில் தொடர்ச்சியாக விருப்புடன் ஈடுபடுவதற்கு ஆசிரியரால் வழங்கப்படும் உந்தல் செயன்முறையாக மீளவலியுறுத்தல் அமைகின்றது.

இத்தகைய மீள வலியுறுத்தலானது ஓர் ஆசிரியரின் கற்பித்தலை வெற்றிகரமாக்கி தான் எடுத்துக் கொண்ட நடத்தை மாற்றங்களை பிள்ளையிடம் விரைவாகத் துலங்கச் செய்யும். எனினும் ஆசிரியர்களால் பயன்படுத்தும் மீள வலியுறுத்தல் நுட்பங்கள் பொருத்தமற்றதாக உடல், உள வயதுக்கேற்றதாக அமையப் பெறாது விடின், தாம் எதிர்பார்க்கும் துலங்கலைக் கட்டியெழுப்ப முடியாது போய்விடுகின்றது.

கற்பித்தலில் ஓர் ஆசிரியன் தனக்கென சில கற்பித்தல் நுட்ப

சில சந்தர்ப்பங்களில் பிழையான துலங்கலை நீக்குவதற்கும் ஆசிரியர்கள் சொல்சார்ந்த மீள வலியுறுத்திகளைப் பயன்படுத்தலாம். குறைகூறல், கேலியாகச் சிரித்தல், இழிவுபடுத்தல் போன்றவை சில வேளைகளில் மனமுறிவுக்கு இடமளிக்கலாம்.

எனவே எதிர்மீள வலியுறுத்திகளை ஆசிரியர் தனது கற்பித்தலில் பயன்படுத்தும் போது வகுப்பறையையும், பாடசாலையையும் வெறுப்பதற்கு இத்தகைய எதிர்மீள வலியுறுத்திகள் காரணமாகலாம் என்பதால் ஆசிரியர்கள் மிகக் கவனமாகவே சொல்சார் எதிர் மீள வலியுறுத்திகளைப் பயன்படுத்த வேண்டும். ஆசிரியர் தனது கற்பித்தலில் மாணவரது உடலியல் தேவைகளை வழங்கி மீள வலியுறுத்துவது உடலியல் மீள வலியுறுத்தி எனப்படும்.

பரிசு வழங்கல், அரவணைத்தல், கைதட்டுதல், கைலாகு கொடுத்தல், சிரித்தல் போன்றவை ஆசிரியரால் வழங்கப்படும் நேரான மீள

> **"ஆசிரியர் தனது கற்பித்தலில் பயன்படுத்தும் போது வகுப்பறையையும், பாடசாலையையும் வெறுப்பதற்கு இத்தகைய எதிர்மீள வலியுறுத்திகள் காரணமாகலாம் என்பதால் ஆசிரியர்கள் மிகக் கவனமாகவே சொல்சார் எதிர் மீள வலியுறுத்திகளைப் பயன்படுத்த வேண்டும். ஆசிரியர் தனது கற்பித்தலில் மாணவரது உடலியல் தேவைகளை வளங்கி மீள வலியுறுத்துவது உடலியல் மீறல் வலியுறுத்தி எனப்படும்."**

முறைகளைக் கையாள்வது அவசியமாகும். தனது நடிப்பங்கை சிறப்பாக்குவதற்கும் தனது சேவையை உளத் திருப்தியுடன் அர்ப்பணிப்பதற்கும் கற்பிந்தல் நுட்ப முறைகள் அவசியமாகிறது. தான் எடுத்துக் கொண்ட நோக்கை நிறைவேற்ற முற்படும் ஆசிரியர் பாடத்துறையில் மாத்திரம் தேற்சியுடையவராக இருத்தல் போதுமானதன்று. அப்பாடத்தோடு இணைந்த உளவியல் நுட்பங்களை தெரிந்தவராகவும் இருத்தல் வேண்டும். உளவியலாளர்களின் கொள்கைகளில் ஆங்காங்கே இத்தகைய மீள வலியுறுத்திகள் பற்றி விளக்கப்பட்டுள்ளது.

மீள வலியுறுத்தல் நுட்பங்களில் சொல்சார்ந்த மீள வலியுறுத்தி என்பது ஆசிரியர் தனது கற்பித்தலின் போது வாயால் கூறக்கூடிய வார்த்தைகளாகும். புகழ்ச்சி அல்லது பாராட்டல் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு கெட்டிக்காரன், நல்ல பிள்ளையென ஆசிரியர் கூறுவாரா

வலியுறுத்திகளாகும். பிள்ளையிடம் எதிர்பார்க்கப்படும் துலங்கல் வெளிப்படும் சந்தர்ப்பங்களிலெல்லாம் இத்தகைய மீள வலியுறுத்தல் நுட்பங்களை ஆசிரியர்கள். கையாளலாம்.

உடலியல் மீள வலியுறுத்திகளில் எதிர்மீள வலியுறுத்தியாகக் கருதப்படுவது தண்டனை வழங்கல், துன்பமான அனுபவத்தைக் கொடுத்தல் என்பன இவ் எதிர் மீள வலியுறுத்தலில் பண்டைய கல்வி முறையில் பிரம்படி மிக முக்கியத்துவம் பெற்றிருந்தது. இன்று தண்டனை வழங்கல் ஒரு மாணவனை தொடர்ச்சியான கற்றலிலிருந்து அன்னியப்படுத்தி இடை விலகலைத் தூண்டுவதோடு சிறுவர் கல்வி உரிமை மீறப்படுவதற்கும் காரணமாக அமைவதால் இத்தகைய மீள வலியுறுத்திகளைப் பயன்படுத்துவதை ஆசிரியர்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

மாணவர் செயற்பாடுகளை மேம்படையச் செய்ய ஆசிரியரால் பயன்படுத்தப்படும் மீள வலியுறுத்திகள் செயற்பாட்டு மீள வலியுறுத்திகளாகும். எதிர்பார்க்கப்படும் துலங்கலை வெளிப்படுத்த கற்பித்தல் துணைச்சாதனங்களைப் பயன்படுத்தல், கல்விச் சுற்றுலாக்களுக்கு அழைத்துச் செல்லல், செய்முறைகளைப்பயன்படுத்தல், மாதிரி உருக்களை அமைத்தல், கல்விக் கண்காட்சிகளைநடாத்துதல்என்பன செயற்பாட்டு மீள வலியுறுத்தியாகும்.

இவை மாணவர்களின் சிந்தனையைக் கிளறி புத்தூக்கம் அடைய வாய்ப்பளிக்கும். ஆக்கத்திறனை விருத்தியடையச் செய்யும். உடல்சார் திறன்களையும் வளர்க்கும். குறித்த விடையங்களைக் கற்பிக்கும் போது விளக்கமுறை விரிவுரை முறைகளைத் தவிர்த்துச் செயற்பாட்டு முறையில் அமைந்த கற்றலுக்கு இம்முறை வழிவகுக்கும். இன்றைய புதிய கல்வி சீர்திருத்தங்களில் இத்தகைய கற்பித்தல் முறைகள் ஆரம்ப வகுப்புக்களிலிருந்து கல்லூரி மட்ட வகுப்புக்கள்வரை பின்பற்றப்படல் வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.



பொருத்தமான துலங்கல்கள் வெளிப்படும் போது எதிர்பார்க்கப்படும் நடத்தைகள் உருவாகும் போது ஆசிரியரால் பயன்படுத்தக் கூடிய மற்றுமோர் மீள வலியுறுத்தல் நுட்பம் அடையாள மீள வலியுறுத்தியாகும்.

அடையாள மீள வலியுறுத்தி என்பது ஆசிரியர்களால் பயன்படுத்தப்படும் அடையாளங்களாகும். மிக நன்று, நன்று என எழுதுதல் நட் சத்திர நிழல் புள்ளிகள் இடல், வேறு அடையாளங்களிடல் என்பன இதில் அடங்கும். குறித்த அடையாளங்களை ஆசிரியர்களிடமிருந்து பெறுவதற்காக மாணவர்கள் முன்வரும் போது எதிர்பார்க்கப்படும் நடத்தைகள் விரைவாக வெளிக்காட்டப்படும் போதும் ஆசிரியர்கள் இவ்வாறான அடை யாள மீள வலியுறுத்திகளைப் பயன்ப டுத்த முடியும் புதிய கல்விச் சீர்திருத்தத்தின்கீழ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பாடசாலை மட்டக் கணிப்பீடுகளும் இத்தகைய புள்ளி வழங்கப்படும் ஒரு அடையாள மீள வலியுறுத்தியாகவே கொள்ளமுடியும்.

கல்வியின் எதிர்பார்ப்புக்களும் தேவைகளும் விரிந்து செல்லும். இன்றைய காலகட்டத்தில் மீள வலியுறுத்திகளை ஆசிரியர்கள் தமது கற்பித்தல் நடவடிக்கைகளில் இணைத்துக் கொள்ளுதல் கட்டாயமாகின்றது. ஆரம்ப வகுப்பு மாணவர்கள் சொல்சார்ந்த மீள வலியுறுத்திகளையும், அடையாள மீள வலியுறுத்தி

திருமதி . எஸ். கணேசலிங்கம்
விரிவுரையாளர்

களையும் மிகவும் விரும்புவர். தமது ஆசிரியரால் வகுப்பறையில் பாராட்டுகளைப் பெறும்போதும், மற்றைய மாணவர்களை விட ஆசிரியரால் வழங்கப்படும் மிக நன்று. என்ற சொல்லை தமது பயிற்சிப் புத்தகங்களில் பெறுவதற்கும் மிகவும் உற்சாகத்தோடு இயங்குவர்.

இவ்வேளையில் ஆசிரியர்கள் இத்தகைய மீள வலியுறுத்தல் நுட்பங்களைப் பயன்படுத்தும் போது மாணவனுக்கு தன்நம்பிக்கை ஏற்படுவதோடு ஆசிரியரிலும் பாடத்திலும் ஈடுபாடு ஏற்படுவதற்கும் வழிவகுக்கும். கனிஷ்ட இடைநிலை வகுப்புக்களுக்குச் செயற்பாட்டு முறைமையில் அமைந்த மீள வலியுறுத்தல் நுட்பங்களை ஆசிரியர் பின்பற்றுவது சிறப்பானதாகும். கனிஷ்ட இடைநிலை வகுப்பு மாணவர்கள் ஆராய்வூக்கமும் செயற்பாடுகளில் நாட்டமும் கொண்டிருப்பர். சம வயதுக் குழுக்களுடன் இணைந்து செயற்படும் தன்மைகள் அதிகமாக இருப்பதால் இக்குழுக்களினூடாகச் செயற்பாடுகளை வழங்கி மீள வலியுறுத்துவதன் மூலம் ஆசிரியர் எதிர்பார்க்கும் நடத்தை நோக்கங்கள் விரைவாக நிறைவேற்றப்படும். மீள வலியுறுத்திகளை ஆசிரியர்கள் பயன்படுத்தும் போது உளவியலாளர்களின் கொள்கைகளையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஸ்கினர் கால இடைவெளிகளை மாறும் நிலையில் கொண்டு மீள வலியுறுத்துதல் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். ஆசிரியர் எப்போது மீளவலியுறுத்தலை வழங்குவார் எனத் தெரியாத நிலையில் கற்கும் போது ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மீள வலியுறுத்தலை எதிர்பார்க்கும் மாணவன் திருப்திகரமான துலங்கலை வழங்கிக் கொண்டிருப்பான் என்பது இவரது கோட்பாட்டில் குறிப்பிடப்பட்ட சிறப்பான மீள வலியுறுத்தல் சந்தர்ப்பமாகும். மேலும் கற்பித்தலில் மீள வலியுறுத்திகளை கையாளும் போது தனியார் வேறுபாடுகள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். வயது மட்டத்திற்கேற்ப நுட்பங்களைப் பயன்படுத்துதல் வருமான மட்டத்திற்கேற்ப நுட்பங்களை வழங்குதல், சமூக அந்தஸ்து நிலைகளை கவனத்தில் கொள்ளல், கற்கும் சந்தர்ப்பத்திற்கேற்ப நுட்பங்களை வழங் குதல், தேவைக்கேட்ப

மீள வலியுறுத்தலை வழங்கல், வேலையின் அளவை கவனத்திற்குக் கொண்டு மீள வலியுறுத்துதல். இவ்வாறான தனியார் தேவைகள் விருப்புக்களை ஆசிரியர் கண்டறிந்து மீள வலியுறுத்திகளைப் பயன்படுத்துவாராயின் கற்றல் வலுவடையும்.

கற்பித்தல் என்பது சிக்கார்ந்த செயன்முறையாக மாறிக்கொண்டிருக்கும். இக்கால கட்டத்தில் சுய விளக்கம், சுய திறன் என்பவற்றை விருத்தி செய்வதற்கு அறிவுத்திறன் மனப்பாங்கு விழுமியங்களை ஒருங்கிணைத்து வழங்குவது இன்றைய ஆசிரியர்களின் கற்பித்தல் கடமையாக வியாபித்துள்ளது. பண்டையக் கல்வி முறையில் மாணவனுக்கு ஆசிரியரிடம் பெற்றுக் கொள்ள வேண்டிய தேவைகள் அதிகம் இருந்தது.

ஆசிரியனுக்கு மாற்றீடாக வேறு கல்வி நிறுவணங்களோ, தொடர்புச் சாதனங்களோ இருக்கவில்லை. குருவிடம் கல்லியையும், கல்விசார் அனுபவங்களையும் கற்க வேண்டிய நிர்ப்பந்தம் இருந்தது. ஆனால் இன்றைய நிலையில் கல்வியை வழங்குவதில் ஆசிரியர் தவிர்ந்த பிற சாதனங்களும் இருப்பதால் ஆசிரியர்கள் மதிக்காத பாடசாலைகளை ஒரு பொருட்டாகக் கருதாத சமூகத்தினருக்கு நாம் கல்வி வழங்க வேண்டிய நிலையில் இருக்கின்றோம். இவை அனைத்துக்கும் மத்தியில் போட்டி போட்டு தமது கடமையை ஆற்றவேண்டிய நிலைக்கு ஆசிரியர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

எனவே, எமது கற்பித்தலில் நவீனத்துவங்களைப் புகுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் ஆசிரியர், மாணவ இடைத் தொடர்புகள் சுமுகமாகவும், நெருக்கமாகவும் இருக்க வேண்டும். ஆசிரியன் இன்றைய மாணவ சமூகத்திற்கு புதிய அனுபவங்களைப் பெற்றுக் கொடுப்பவராக மாற வேண்டும். இதற்கென கற்பித்தல் பணிகளில் புதுமைகள் இணைக்கப்படல் வேண்டும்.

எனவே மாணவன், சமூகம்



என்பவற்றோடு ஆசிரியர் இடைத் தொடர்பு கொண்டு தனது ஆசிரியர் தொழிலை செவ்வனே செய்வதற்கும் சமூகத்தில் ஜனரஞ்சக ஆசிரியராக மதிக்கப்படுவதற்கும் மீள வலியுறுத்தல்கள் நுட்பங்களை கைகொள்ள வேண்டியது அவசியமாகும். உளவியல் ரீதியான கொள்கைகளைக் கற்று பூரணமான ஆசிரியனாக வகுப்பறையில் நிமிர்ந்து நிக்க ஒவ்வொரு ஆசிரியரும் மீள வலியுறுத்தல் நுட்பங்களை மாணவர்கேற்ப பயன்படுத்தி தமது கற்பித்தலை வினைத்திறனுடையதாக்க வேண்டும்.

# எம்.ஜி.ஆரும் புலிகளும்

[சென்றவாரத் தொடர்ச்சி.....]
இட்டலி, தோசை, வடை, பூரி என்று
எனக்குப் படைத்ததை எல்லாம் வயி
று நிறைய விழுங்கினேன். எம்.ஜி.
ஆருக்குப் பரம திருப்தி.

விடுதலைப் புலிகள் தலை
மை தாங்கி முன்னெடுத்து வரும் தமி
ழீழ சுதந்திர இயக்கத்திற்கு எம்.ஜி.
ஆர் அவர்கள் நல்கிய உதவி அளப்
பெரியது. எல்லாவற்றையுமே முழு
மையாக இங்கு ஆவணப்படுத்த முடி
யாத போதும், ஒரு சில முக்கிய சம்
பவங்களையாவது பதிவு செய்வது
வரலாற்று ரீதியாகப் பயன்படும் எனக்
கருதுகின்றேன். இப்பொழுது தமிழ்
நாட்டில் விடுதலைப் புலிகள் என்ற
சொல்லை உச்சரிப்பதே சட்டவிரோத
மான ஒரு குற்றச் செயலாகக் கருதப்ப
டுகின்றது. எம்.ஜி.ஆர் அவர்கள் வளா்
த்து விட்ட அ.தி.மு.க கட்சியும், அத
ன் தலைமையும் இன்று விடுதலைப்
புலிகளுக்கு எதிராகப் போர்க் கொடி
உயர்த்தி நிற்கின்றன. ஆனால் அன்று
எம்.ஜி. ஆர் அவர்கள் ஈழ மக்களின்
விடுதலைக்காக மிகவும் துணிச்சலாக
காரியங்களைப் புரிந்து எமக்கு கை
கொடுத்து உதவியிருக்கின்றார்.

ஒரு தடவை சென்னைத்
துறைமுகம் ஊடாக ஆயுதங்களைத்
தரையிறக்க முயன்றோம். எமக்காக
நவீன ஆயுதங்கள் அடங்கிய கொள்க
லனுடன் வெளி நாட்டுக் கப்பல் ஒன்று
சென்னைத் துறைமுகம் வந்தடைந்த
து. துறைமுகம் ஊடாக ஆயுதக் கொ
ள்கலனை வெளியே எடுக்க நாம்
செய்த பகீரத முயற்சிகள் பயனளிக்க
வில்லை. சரியாக ஒரு மாதத்திற்கு
முன்புதான் உமாமகேஸ்வரன் ஒழு
ங்கு செய்த ஆயுதக் கப்பல் ஒன்று
இந்தியப் புலனாய்வுத் துறையினரால்
கைப்பற்றப்பட்டது. பல கோடி பெறு
மதியான ஆயுதங்களைப் புளொட்
இயக்கம் இழக்க நேரிட்டது. புலிக
ளுக்கு இந்தக் கதி நேரக் கூடாதென
விரும்பினோம். ஆயுதங்களைப் பறி
கொடுக்காமல் வெளியே எடுப்பதற்கு
எம்.ஜி.ஆரின் உதவியை நாடுவதே
ஒரே ஒரு வழியாக எனக்குத் தென்பட்
டது. பிரபாகரனும் நானும், எம்.ஜி.
ஆரிடம் சென்றோம் நிலைமையை
எடுத்து விளக்கினோம்.

"நீங்கள் கொடுத்த பணத்
தில் இந்த ஆயுதங்களை வாங்கியிரு
க்கின்றோம். சென்னைத் துறை முக
த்தில் ஒரு கப்பலில், ஒரு கொள்கல
னுள் இந்த ஆயுதங்கள் இருக்கின்றன.
எப்படியாவது அதனை வெளியே எடு
த்துத் தரவேண்டும். நீங்கள் மனம்
வைத்தால் முடியும்" என்று கேட்டோ
ம். எதுவித தயக்கமோ, பதட்டமோ
அவரிடம் காணப்படவில்லை. "இது
தானா பிரச்சினை? செய்து முடிக்கலா
ம்" என்று கூறிவிட்டு, துறைமுக சுங்க
மேலதிகாரிகளுடன் தொலைபேசியில்
கதைத்தார். பின்பு எம்மிடம் ஒரு சுங்க
அதிகாரியின் பெயரைக் குறித்துத்தந்
து, அவரைச் சந்தித்தால் காரியம்
சாத்தியமாகும் என்றார் முதலமைச்சர்.
அவருக்கு நன்றி தெரிவித்து விட்டு
நாம் மகிழ்வுடன் வீடு திரும்பினோம்.

சென்னைத் துறைமுகத்தி
லிருந்து ஆயுதக் கொள்கலனை மீட்டு
வரும் பொறுப்பை கேணல் சங்கரிடம்
கையளித்தார் பிரபாகரன். ஒரு சில
தினங்களுக்குப் பின்னர் ஒரு நாள்
இரவு தமிழ் நாட்டுக் காவல் துறையி
னரின் பாதுகாப்புடன் பாரம் தூக்கி
பொருத்திய கனரக வாகனத்தில் எம
து ஆயுதக் கொள்கலன் சென்னை
நகரம் ஊடாகப் பவனி வந்து நாம்
குறிப்பிட்ட ஒரு இடத்தில் இறக்கப்பட்
டது. அதில் ஒரு தொகுதி ஆயுதங்க
ள் திருவான் மையூரில் நாம் வசித்த
வீட்டில் குவிக்கப்பட்டது. ஏவுகணை
கள், தானியங்கித் துப்பாக்கிகள்,

## விடுதலைக்கு வித்திட்ட மாமனிதர்

ரவைப் பெட்டிகள், கைக்குண்டுகளாக
வீடு நிறைந்திருந்தது. அவை வீட்டிலி
ருந்து அகற்றப்படும் வரை என்னால்
நிம்மதியாகத் தூங்க முடியவில்லை.

எந்தப் பிரச்சினையுமின்றி
பாதுகாப்பாக ஆயுதங்களைப் பெற்
றுத் தந்ததற்காக எம்.ஜி.ஆருக்கு நேரி
ல் சென்று நன்றி தெரிவித்தார் பிரபாக
ரன். அந்தப் பேருதவியின் நினைவுச்
சின்னமாக இறக்கப்பட்ட ஆயுதங்
களில் இருந்து ஒரு புதிய ஏ.கே.-47
ரக தானியங்கித் துப்பாக்கியை
எம்.ஜி.ஆரிடம் கையளித்தார் பிரபா.
அந்தத் துப்பாக்கியை கழற்றிப் பூட்டி
அதன் செயற்பாட்டு இயக்கத்தையும்
விளங்கப்படுத்தினார். எம்.ஜி.ஆருக்கு
மட்டற்ற மகிழ்ச்சி.

இந்தச் சம்பவம் நிகழ்ந்து
நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர்
ஒரு தடவை சுகவீனமுற்றிருந்த முத
லமைச்சரை நான் சந்திக்கச் சென்
றேன். பிரபாகரனைச் சுகம் விசாரித்
தார். தமிழீழத்தில் சௌக்கியமாக
இருக்கின்றார் என்றேன். அப்பொழுது
தனது படுக்கையில் தலையணிகளின்
கீழ் வைக்கப்பட்டிருந்த ஒரு ஏ.கே.-
47 துப்பாக்கியை எடுத்துக் காண்பி
த்து, "இது பிரபாகரன் தந்த நினைவுப்
பரிசு" என்று பெருமிதத்துடன் சொ
ன்னார்.

எமக்குத் தேவை ஏற்பட்ட
வேளைகளில் எம்.ஜி.ஆர் அளித்த
நிதி உதவிகளை ஆதாரமாகக் கொ
ண்டே இயக்கம் ஓடிக் கொண்டிரு
ந்தது. ஒரு தடவை எமக்கு பெருமளவி
ல் நிதி தேவைப்பட்டது. தலைவர்
பிரபாகரன் அவர்கள் என்னை எம்.ஜி.
ஆரிடம் தூது அனுப்பினார். நான்
எம்.ஜி.ஆரைச் சந்தித்த பொழுது மு
தல்வருடன் அமைச்சர் பண்டுருட்டி
இராமச் சந்திரனும் இருந்தார்.

"இராணுவ - அரசியல் ரீதி
யாக எமது விடுதலை இயக்கம்
பெருமளவில் வளர்ச்சி கண்டுவிட்டது.
பலவேறு வேலைத்திட்டங்களை நி
றைவு செய்ய வேண்டி இருக்கின்றது.
இம்முறை பெரிய தொகையில் பணம்
தேவைப்படுகின்றது. தம்பி பிரபாகரன்
உங்களைத் தான் நம்பியிருக்கிறார்"
என்றேன்.

"பெரிய தொகையா? எவ்வ
ளவு தேவைப்படுகின்றது?" என்றார்
முதல்வர்.

"ஐந்து கோடி வரைத் தே
வைப் படுகின்றது" என்றேன்.

எம்.ஜி.ஆர் அவர்கள் திரு.
பண்டுருட்டி இராமச்சந்திரனைப் பார்
த்து, "மாநில அரசு மூலமாக ஏதாவது
செய்யலாமா? என்று கேட்டார்.

அமைச்சர் சில வினாடிகள்
வரை சிந்தித்து விட்டு, "போரினால்
பாதிக்கப்பட்ட ஈழத்து மக்களுக்கென
தமிழ் நாட்டு அரசால் திரட்டப்பட்ட
நிதி இருக்கின்றது. நான்கு கோடிக்கு
மேல் வரும். அந்த நிதியை இவர்களு
க்குக் கொடுக்கலாமே? ஈழ மக்களின்
உரிமைப் போராட்டத்திற்கு இந்நிதி
வழங்கப்படுவதில் தப்பில்லை அல்ல
வா? என்றார்.

"அப்படியே செய்யுங்கள்.
இந்த விடயத்தை உங்கள் பொறுப்
பில் விடுகின்றேன்" என்றார் எம்.ஜி.
ஆர்.

இதனை அடுத்து அமைச்சர்
பண்டுருட்டி இராமச்சந்திரன் அவர்க
ளின் இல்லத்திற்கு இரவு பகலாக
அலைய வேண்டியிருந்தது. "தமிழ்
நாட்டு அரசின் பொறுப்பிலுள்ள நிதி
என்பதால், ஒழுங்கான முறையில்
செய்ய வேண்டும். உங்களது தமிழர்
புனர்வாழ்வு அமைப்பின் வாயிலாக
அதிகார பூர்வமான வேலைத்திட்டம்
(project) ஒன்று தயாரித்துத் தாரு
ங்கள். இத்திட்டம் நான்கு கோடி ரூபா
வரையிலான செலவீனங்களைக் கொ
ண்டிருக்க வேண்டும்" என்றார் அமைச்
சர். அவர் கேட்டுக் கொண்டதற்கிண
ங்க ஒரு மருத்துவ மனை நிர்மாணித்



தற்கான வேலைத்திட்டங்களைத்
தயாரித்து தமிழர் புனர்வாழ்வுக் கழ
கத்தின் சார்பில் அமைச்சரிடம் கைய
ளித்தேன். இறுதியாக ஒரு அரச செய
லகத்தில் வைத்து நான்கு கோடி
ரூபாவுக்கான காசோலை எனக்குக்
கையளிக்கப்பட்டது. இந்நிதி விவகா
ரத்தில் அரச அதிகாரிகள் பலர் ஈடுப
ட்டதால், தமிழ் நாட்டு ஊடகங்களு
க்குச் செய்தி கசிந்து விட்டது. மறு
நாள் காலை இந்தியன் எக்ஸ்பிரஸ்'
ஆங்கிலப் பத்திரிகையின் தலைப்புச்
செய்தியாக இவ்விவகாரமும் அம்பல
மாகியது. அது ஒரு அரசியல் பூகம்
பத்தைக் கிளப்பியது. விடுதலைப்
புலிகளின் ஆயுதப் போராட்டத்திற்கு
தமிழ் நாட்டு அரசு நிதியுதவி செய்வ
தாகவும் தமிழக முதலமைச்சர் இலங்
கையின் இறைமையை மீறுவதாகவும்
ஜனாதிபதி ஜெயவர்த்தனா இந்தியப்
பிரதமர் திரு.ராஜீவ் காந்தியிடம் கடு

**கலாநிதி:-**
**அன்ரன் பாலசிங்கம்**

மையாக ஆட்சேபம் தெரிவித்தார். ரஜீ
வ் காந்தி உடனடியாகவே எம்.ஜி.
ஆரிடம் தொடர்பு கொண்டு தமது
ஆட்சேபத்தைத் தெரிவித்தார். அன்
று மாலை தன்னை அவசரமாக சந்தி
க்குமாறு எம்.ஜி.ஆர் எனக்கு அழைப்பு
விடுத்தார். கைக்கு எட்டியது வாய்க்கு
எட்டவில்லை என்ற கவலையோடு
நான் முதலமைச்சரின் இல்லத்திற்
குச் சென்றேன். அங்கு முதல்வருடன்
அமைச்சர் பண்டுருட்டி இராமச்சந்திர
னும் இருந்தார்.

ஆத்திரத்துடன் காணப்பட்
டார் எம்.ஜி.ஆர். ஜெயவர்த்தனா ரஜீ
விற்கு முறையிட்டதையும் ரஜீவ் தன
க்கு ஆட்சேபனை தெரிவித்ததையும்
விபரமாகச் சொன்னார். சிங்கள வெறி
யன் என்றும், ஈழத் தமிழர்களுக்கு
கொடுமை இழைப்பவன் என்றும் முத
லில் ஜெயவர்த்தனாவைத் திட்டித்
தீர்த்தார். ரஜீவையும் விட்டு வைக்கவி
ல்லை. துணிவில்லாதவர் என்றும் பய
ந்த பேர்வழி என்றும் ரஜீவிற்கும்
திட்டு விழுந்தது. "ஈழத் தமிழர்களு
க்கு திரட்டிய நிதியை அந்த மக்களி
ன் உரிமைக்காகப் போராடும் விடுத
லை இயக்கத்திற்கு கொடுப்பதில்
என்ன தவறு? இதனைப் பிரமத மந்திரி
புரிந்து கொள்கிறார் இல்லையே"
என்று ஆதங்கப்பட்டார் முதல்வர்.

"அந்தக் காசோலையை
வைத்திருக்கின்றீர்களா? வங்கியில்
போடவில்லை அல்லவா? என்று கேட்
டார்.

"அந்தக் காசோலை என்னி
டம் தான் இருக்கின்றது" எனறேன்.
அதனை அமைச்சரிடம் திருப்பிக்
கொடுக்கும் படி சொன்னார்.

"நாளை இரவு வீட்டிற்கு
வாருங்கள். எனது சொந்தப் பணத்தி
லிருந்து நான்கு கோடி தருகின்றேன்"
என்றார். போன உயிர் திரும்பி வந்தது
போல இருந்தது. ஒரு நிம்மதிப் பெரு
மூச்சுடன் எம்.ஜி.ஆருக்கும் அமைச்சர்
பண்டுருட்டிக்கும் நன்றி சொல்லிவிட்
டுப் புறப்பட்டேன். வீடு திரும்பியதும்,
நடந்ததை எல்லாம் பிரபாகரனுக்கு
எடுத்துச் சொன்னேன். முதல்வரின்
பெரும் தன்மையைப் பாராட்டினார் பிர
பாகரன். மறுநாள் இரவு எம்.ஜி.ஆரின்
பாதாளப் பண அறையிலிருந்து நான்
கு கோடி ரூபா புலிகளின் கைக்குக்
கிட்டியது.

விடுதலைப் புலிகளின் இய
க்கத்திற்கும் தமிழ் நாட்டு அரசுக்கும்
மத்தியில் நல்லுறவு நிலவியது. எமது
இயக்கத்தின் மீதும் தலைவர் பிரபா
கரன் மீதும் முதலமைச்சர் எம்.ஜி.ஆர்
அவர்கள் கொண்டிருந்த அன்பும்
மதிப்புமே இந்த நல்லுறவுக்கு ஆதார
மாக விளங்கியது. தமிழ் நாட்டில்
எவ்வித குற்றச் செயல்களிலும்
ஈடுபடாமல் எமது போராளிகள் நல்
லொழுக்கத்தையும், கட்டுப்பாட்டை
யும் பேணி வந்தனர். இவ்விடயத்தில்
பிரபாகரன் மிகவும் கண்டிப்பாக இருந்
தார். ஆயினும் தமிழ் நாட்டில் செயற்
பட்டு வந்த ஏனைய அமைப்புக்க
ளைச் சேர்ந்த உறுப்பினர்கள் எவ்வித
ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும்
பேணவில்லை. தமிழ் நாட்டில் இவர்
களது குற்றச் செயல்களும், வன்மு
றைச் சம்பவங்களும், சமூக விரோதச்
செயற்பாடுகளும் தலைவிரித்தாடின.
இதனால் தமிழ் நாட்டு மக்கள் மத்தி
யில் பொதுவாக ஈழப் போராளிகள்
மீது வெறுப்புணர்வு வளரத் தொடங்கி
யது. பல்வேறான ஈழப் போராளி
அமைப்புக்கள் பற்றியும் அவர்கள்
மத்தியில் நிலவிய வேறுபாடுகளை
யும் புரிந்து கொள்ளத் தவறிய தமிழ
கப் பத்திரிகைகள் எல்லோரையுமே
'ஈழத்துப் புலிகள்' என்றும், 'ஈழத்துத்




தீவிரவாதிகள்' என்றும் பொதுவாகக்
கண்டனக் குரல் எழுப்பின. இதனால்
எமது அமைப்பிற்குச் சிக்கல் எழுந்த
து. பத்திரிகைகள் மட்டுமன்றித் தமிழ
கக் காவல்த் துறையினரும் இக் குழப்
பத்திற்குள் சிக்கி எமக்கு விரோதமாக
த் திரும்பினர். வன்முறைச் சம்பவங்க
ள் அதிகரித்து தமிழ் நாட்டில் சட்டமு
ம் ஒழுங்கும் பாதிக்கப்பட்ட பொழுது
முதலமைச்சர் எம்.ஜி.ஆர் அவர்களுக்
கும் இதுவொரு சவாலாக எழுந்தது.

ஏனைய அமைப்புக்களின்
வன்முறைச் சம்பவங்கள் தமிழ்
நாட்டை ஆட்டிப் படைத்தன. உதார
ணமாக 1984 ஆகஸ்ட் மாதம் தமிழீழ
இராணுவம் என்ற குழுவின் தலைவர்
தம்பாப்பிள்ளை மகேஸ்வரன், சிறிலங்
கா எயர்லைன் விமானத்திற்கு குறி
வைத்த வெடிகுண்டு சென்னை
மீனம்பாக்கம் விமான நிலையத்தில்
தவறுதலாக வெடித்ததில் 30 பொது
மக்கள் கொல்லப்பட்டதுடன் 50 பேர்
வரை காயமடைந்தனர். இந்த வன்
முறைச் சம்பவம் தமிழ் நாட்டை மட்டு
மன்றி முழு இந்தியாவையுமே உலுப்
பிவிட்டது. விடுதலைப் புலிகளைத்
தவிர ஏனைய அமைப்புக்கள் இந்தி
யாவில் பயிற்சி எடுத்த போராளிகளை
உடனடியாகத் தமிழீழக் களத்திற்கு
அனுப்ப முடியவில்லை. அதற்கான
போரியல் திட்டங்களும் இவர்களிடம்
இருக்கவில்லை. அத்துடன் பெருந்
தொகையான போராளிகளைப் பராம
ரிக்க அவர்களிடம் பண பலம் இருக்க
வில்லை. இதனால் சில அமைப்புக்
களின் கட்டுப்பாடு உடைந்தது. ஒழு
ங்கீனமும் சீர்கேடும் தலை தூக்கியது.
இலக்கின்றி அலைந்த ஈழத்து இளை
ஞர்கள் சமூக விரோதச் செயல்களில்
இறங்கினர். தமிழ் நாட்டுக் கிராமப்
புறங்களில் உள்ள உள்ளூர் மக்கள்
சிலர் கொல்லப்பட்டனர்.

வீடுகள் சூறையாடப்பட்டன.
1985 டிசம்பரில் வேதாரணியத்தில்
ஆயுதம் தரித்த புளொட் உறுப்பினர்
கள் உள்ளூர் விவசாயிகள் மீது துப்
பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒருவர்
கொல்லப்பட்டு பலர் படுகாயமடைந்
தனர். எல்லாவற்றிக்கும் சிகரம் வைத்
தது போன்று 1986ஆம் ஆண்டு நவம்
பர் மாதம் முதலாம் திகதி தீபவாளித்
தினதன்று சென்னை நகரின் மையத்
தில் அமைந்திருக்கும் சூழைமேட்டி
ல் ஒரு வன்முறைச் சம்பவம் நிகழ்ந்த
து. இந்த வன்முறைச் சம்பவத்தின்
கதாநாயகராக விளங்கியவர் டக்ளஸ்
தேவானந்தா. இப்பொழுது சனநாயக
வாதியாக வேடம் பூண்டு ஈ.பி.டி.பி
இன் தலைவராக விளங்கும் இவர்
அப்பொழுது ஈ.பி.ஆர்.எல்.எவ் இன்
இராணுவப் பிரிவில் பணி புரிந்தவர்.

ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் தலை
மைச் செயலகம் சூளைமேட்டுப் பிர
தான வீதியில் அமைந்திருந்தது. அன்
று தீபாவளி பண்டிகை என்பதால் வீ
தியெங்கும் சனசமுத்திரம், நண்பகல்
வேளை ஓட்டோவில் தனது அமைப்
பின் செயலகத்திற்கு முன்பாக வந்தி
றங்கினார் தேவானந்தா. ஓட்டோ கூலி
க்கு பேரம்பேசியதில் எழுந்த சிறு த
கராறுசொற் சண்டையாக வெடித்தது.

**தொடரும்..........**

# உலக செய்திகள்

## நேபாளத்தில் முடியாட்சியை ஒழிக்குமாறு கிளர்ச்சிக் காரர்கள் நிபந்தனை.



(ராய்ட்டர்)

நேபாளத்தில் மன்னர் அரச அதிகாரங்களை நேரடியாக தன் வசப்படுத்தி 12 நாட்களுக்குப் பிறகு அங்கு கடந்த 9 வருடமாக கிளர்ச்சியில் ஈடுபட்டு வரும் மாவோயிஸ்ட் கிளர்ச்சிக்காரர்கள் தற்போது நாட்டின் எதிர்காலம் தொடர்பிலான தமது நிலைப்பாட்டை கடுமையாக்கியுள்ளனர்.

ஆரம்பத்தில் முடியாட்சி ஒழிக்கப்பட வேண்டும் என்று கோரி போராட்டத்தை கடந்த 1996 ஆம் ஆண்டு பெப்ரவரி 13ம் திகதி ஆரம்பித்த கிளர்ச்சிக்காரர்கள் பின்னர். தமது கோரிக்கையை தளர்த்தி அரசியலமைப்பு மாற்றம் செய்வதற்கான ஒரு சபைக்கான தேர்தல், இடைக் காலநிர்வாகம் மற்றும் ஒரு வட்ட மேசைமாநாடு போன்றவற்றைக் கோரினார்கள். ஆனால் இரு வாரங்களுக்கு முன்னர் நாட்டின் நிர்வாகத்தை மன்னர் நேரடியாக தனது கட்டுப்பாட்டில் எடுத்ததை அடுத்து, மாவோயிஸ்ட் கிளர்ச்சிக்காரர்கள் தமது நிலைப்பாட்டை மீண்டும் கடுமையாக்கியுள்ளனர்.


அரசரின் முடிவையடுத்து நாடளாவிய தடைப் போராட்டம் ஒன்



றுக்கு அழைப்பு விடுத்த மாவோயிஸ்ட்டுகள், தற்போதைக்கு சமரச பேச்சுவார்த்தைக்கு சாத்தியம் எதுவும் கிடையாது என்று கூறுகின்றனர்.

அது மாத்திரமன்றி தமது முன்னைய கோரிக்கைகள் காலாவதியாகி விட்டதாக கூறும் அவர்கள், மன்னரின் ஆட்சிமுடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும் என்று தமது நிலைப்பாட்டை மேலும் கடுமையாக்கியுள்ளனர்.

## கனநீர் அணு உலை நிர்மாணத்தை கைவிட ஈரான் மறுப்பு.



(ராய்ட்டர்)

கனநீர் அணு உலை ஒன்றை உருவாக்குவதற்கான தமது திட்டத்தைக் கைவிடப் போவதில்லை என்று ஈரான் அறிவித்துள்ளது.

ஈரானுடன், அதன் அணுத் திட்டம் குறித்து பேச்சு நடாத்தி வரும் மூன்று ஐரோப்பிய நாடுகளும், கனநீர் உலைக்கு பதிலாக மென்நீர் அணு உலையை பரிந்துரைத்தன. மென்நீர் அணு உலையை பயன்படுத்தி, அணுகுண்டு உற்பத்திக்கு போதுமானபுளுட்டோனியத்தைப் பெறுவது மிகவும் கடினம் என்று செய்தியாளர்கள் கூறுகின்றனர். மென்நீர் உலை தொடர்பான ஐரோப்பிய நாடுகளின் பிரேரனையைத் தாம் வரவேற்பதாகவும் ஆனால் கனநீர் அணு உலையை நிர்மாணிப்பதற்கான செயற்பாடுகளில் தாம் நீண்டதூரம் சென்று விட்ட நிலையில் அதனை தாம் கைவிட முடியாது என்று ஈரான் தரப்புப் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார். ஈரான் அணு வாயுதங்களைத் தயாரிக்க முயற்சி செய்வதாக அமெரிக்கா சந்தேகிக்கின்றது.

## ஈராக் தேர்தலில் ஷியா மதத்தினரின் கட்சி வெற்றி.



(ராய்ட்டர்)

ஷியா வேட்பாளர்கள் பெரும்பான்மையாக உள்ள குழுவொன்று ஈராக்கிய பொதுத் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளது.

மூத்த மத குருவான அயதொல்லா அலி சிஸ்தானியின் அனுசரணையுடனான இந்தக் குழு அளிக்கப்பட்ட எண்பத்தைந்து லட்சம் வாக்குகளில் சுமார் அரைவாசியை பெற்றுள்ளது.


இந்தக் குழு ஒரு பிரதமரை பிரேரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இடைக்காலப் பிரதமர் இயட் அலாவியினால் தலைமை தாங்கப்படும் கூட்டணி சுமார் கால் வாசி வாக்குகளைப் பெற்ற குர்து இனத்தவர்களின் இரண்டு கட்சிகளினால் மூன்றாம் இடத்துக்குத் தள்ளப்பட்டது.

சதாம் குசைனின் ஆட்சியில் ஆக்கிரமித்திருந்த பல ணசுனி இன முஸ்லிம்கள். இரண்டு வாரத்துக்கு முன்னர் நடந்த ஈராக்கின் இந்தத் தேர்தலை பகிஸ்கரித்திருந்தனர்.

அவர்களை அரசியல் செயற்பாடுகளுக்குள் ஈர்க்க முயற்சிக்கப் போவதாக ஷியா தலைவர்கள் கூறுகின்றனர்.

275 உறுப்பினர்களைக் கொண்ட தேசிய சபையில் அதிகார சமநிலையை தம்வசம் தக்க வைத்துக் கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படும். குர்து இனத்தவர்களின் கட்சிகள் அதிபர் பதவி தமக்கு வழங்கப்பட வேண்டும் என்று கோருகின்றார்கள்.

## சிகிச்சை பெற்ற பாப்பரசர் மக்கள் முன் பிரசன்னம்.



(ராய்ட்டர்)

மூச்சுத் திணறல் அவசர சிகிச்சை பெற்று மருத்துவமனையில் இருந்து திரும்பிய பின்னர் புனித பாப்பரசர் நேற்று வத்திக்கானில் முதல் தடவையாக பொது மக்கள் முன்பாக பிரசன்னமானார்.

மற்றுமொரு மதகுருவால் நடத்தப்பட்ட பூசைக்கு முன்னதாக ரோம் நகரின் புனித பீற்றர் சதுக்கத்தில் கூடிய மக்களின் முன்பான தனது சாரளத்தின் ஊடாக தோன்றிய பாப்பரசர் அவர்களுக்கு ஆசி வழங்கினார். ஈராக்கில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒரு செய்தியாளர் மற்றும் ஏனையோரின் உடனடி விடுதலை தொடர்பாக இந்த பூசையில் பிரார்த்திக்கப்பட்டது. அதன் பின்னர் பாப்பரசர் தனது வழமையான மதிய ஆசீர்வாதத்தினை தளர்வான குரலில் வழங்கினார்.

## மத்திய கிழக்கில் ஒரு மாற்றத்தை கொண்டு வரும் ஈராக் தேர்தல்.

(ராய்ட்டர்)

ஈராக்கில் நடந்து முடிந்த தேர்தல் அந்த நாட்டின் வரலாற்றில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் என்று மத்திய கிழக்குப் பிராந்திய ஆய்வாளர் தெரிவித்துள்ளார்.

சதாம் குசைன் தலைமையில் இதுவரை ஈராக்கை சிறுபான்மை சுனி முஸ்லிம்கள் ஆட்சி செய்த நிலைமை மாறி தற்போது பெரும்பான்மை ஷியா முஸ்லிம்கள் ஜனநாயக முறைப்படி ஆளும் நிலை அங்கு உருவாகியிருப்பதாகவும், இதுவரை இடம் பெற்ற நிகழ்வுகளுக்காக ஷியா முஸ்லிம்கள், சுனி மக்களை பழிவாங்காமல் இருக்க வேண்டும் என்பதிலேயே அதன் எதிர்காலம் தங்கியுள்ளது என்று தான் நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டார்.



ஷியா மதத்தினரின் இந்த அரசுக்கும், அமெரிக்காவுக்கும் இடையிலான உறவுகள். அமெரிக்கா எவ்வளவு விரைவில் ஈராக்கில் இருந்து வெளியேறுகின்றது என்பதிலேயே தங்கியுள்ளது என்றும் அவர் கூறினார். ஈராக்கில் ஏற்பட்டுள்ள இந்த ஜனநாயக இலக்கான மாற்றம் மத்திய கிழக்கு பிராந்தியத்திலேயே பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் என்றும் அவர் கூறினார்.

## டிரீஸ்டன் நகர தாக்குதலின் அறுபதாவது ஆண்டு நினைவு.




(ராய்ட்டர்)

இரண்டாம் உலகப் போரின் போது நாசிப்படையினரின் வீழ்ச்சிக்கு மூன்று மாதங்களுக்கு முன்னதாக நேசப்படைகளின் கூட்டணியினால் டிரீஸ்டன் என்னும் இடத்தில் நடத்தப்பட்ட மிகுந்த சர்ச்சைக்குரிய தாக்குதலின் அறுபதாவது ஆண்டு நினைவு இன்று அனுஷ்டிக்கப்படுகின்றது.

அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் விமானங்களால் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் குறைந்தது முப்பத்தையாயிரம் பேர் கொல்லப்பட்டதுடன் அதன் மூலம் ஏற்பட்ட தீயில் நகர் முற்றிலும் நிர்மூலமானது.

நேற்று நகரின் மயானத்தில் நடந்த மலர் வளையம் வைக்கும் நிகழ்வில் நேசப்படைகளில் அங்கம் வகித்த மூன்று முக்கிய சக்திகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

உறவுகளை மீண்டும் சுமூகமாக்கும் நோக்கிலேயே இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் அவை ஜேர்மனியில் பெரும் வாதப் பிரதிவாதங்களை ஊக்கப்படுத்தியுள்ளன.

இந்த நகரின் நிர்மூலம் ஒரு போர்க்காலக் குற்றமாக கண்டிக்கப்பட வேண்டும் என்று ஒரு தரப்பினர் கூறுகின்றனர்.

கடுமையான பொலிஸ் பாதுகாப்புக்கு மத்தியில் வலதுசாரி ஆதரவாளர்கள் பல்லாயிரக்கணக்கானோர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினார்கள்.



## காதலர் தினத்தை முன்னிட்டு சிவப்பு ரோஜாக்கள் தடை.

(ராய்ட்டர்)

காதலர் தினத்தை முன்னிட்டு நேற்று திங்கட்கிழமை சிவப்பு ரோஜாக்களை விற்பனை செய்ய அனுமதிக்க மாட்டோம் என்று சவூதி அரேபியாவில் உள்ள பூக்கடைகளுக்கு அந்த நாட்டு அரசு அறிவித்துள்ளது.

காதலர் தினம் சவூதியில் கொண்டாடப்படுவதைத் தடுக்கும் வகையில் அங்கு கடைகளில் சிவப்பு மலர்கள், கரடிப் பொம்மைகள், வாழ்த்து அட்டைகள் மற்றும் சிவப்பு நிற அல்லது இதய வடிவிலான பரிசுப் பொருட்களை விற்க சவுதி நாட்டின் மதப் பொலிசார் தடை விதித்துள்ளதாக மலர் விற்பவர்கள் கூறுகின்றார்கள்.

ஆயினும் அதிகார பூர்வமற்ற வகையில் விற்பனைகள் தொடர்வதாகவும் சில கடைகள் காதலர்களுக்கான பொருட்களை ரகசியமாக விற்க முயலுவதாகவும் செய்தியாளர்கள் கூறுகின்றனர்.

# டென்னிசில் புதிய சாதனை படைத்த சானியாவின் அடுத்த இலக்கு என்ன?

(ஐதராபாத்)

ஓபன் டென்னிஸ் சாம்பியன்ஷிப் பட்டம் வென்று புதிய சாதனை படைத்திருக்கிறார். சர்வதேச டென்னிஸ் அமைப்பு (டபிள்யூ. டி. ஏ. ,) அங்கீகாரம் பெற்ற டென்னிஸ் தொடர் ஒன்றில் சாம்பியன் பட்டம் கைப்பற்றும் முதல் இந்திய வீராங்கனை என்ற சாதனை படைத்த சானியாவை நாடே வாழ்த்துகிறது.

ஐதராபாத் ஓபன் டென்னிஸ் சாம்பியன் பட்டம் வென்ற சானியா மிர்சாவுக்கு ஜனாதிபதி அப்துல் கலாம், பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவர் சோனியா உட்பட நிறையத் தலைவர்கள், டேவிஸ் கோப்பைக்கான இந்திய அணியின் முன்னாள் பயிற்சியாளர் அக்தர் அலி,மகேஷ் பூபதி, பயஸ் போன்ற விளையாட்டுத்துறைப் பிரபலங்கள் வாழ்த்துச் செய்தி அனுப்பிய வண்ணம் இருக்கின்றனர். புதிய சாதனை படைத்தாகி விட்டது. சானியாவின் அடுத்த இலக்கு என்ன? அவரே சொல்கிறார்.என்னால் நம்பவே முடியவில்லை. இந்த வெற்றி எனக்கு மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது. அடுத்து எனது உடனடி இலக்கு. உடல்நிலையைக் கவனிப்பதுதான். இடது முழங்கால் காயத்துடன் இந்தத் தொடரில் போராடித்தான் ஜெயித்தேன். வலது முழங்கால் வேறு காயமாகி விட்டது. உடல் நிலை பிட்னஸ் சரியாக வைத்துக் கொள்ளவேண்டும். அதுதான் இப்போதைக்கு எனது இலக்கு. அதற்குப் பிறகுதான் இனி போட்டிகள், என்கிறார் சானியா.






## இங்கிலாந்திற் கெதிராக மூன்று விக்கெட் வித்தியாசத்தில் தென்னாபிரிக்கா வெற்றி

(செஞ்சூரியன்)

செஞ்சூரியன் ஒரு நாள் போட்டியில் தென்னாபிரிக்க அணி இங்கிலாந்தை 3 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தியது. இதன் மூலம் இந்த அணி தொடரை 4-1 என்ற கணக்கில் கைப்பற்றியது. இங்கிலாந்து தரப்பில் தனி நபராக போராடிய கெவின் பீட்டர்சன் சதம் அடித்து ஆறுதல் தந்தார்.



தென்னாபிரிக்கா சென்ற இங்கிலாந்து அணி 7 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்றது. தென்னாபிரிக்கா 3-1 என்ற முன்னிலையில் தொடரை வெல்ல, முக்கியமில்லாத ஏழாவது போட்டி நேற்று முன்தினம் செஞ்சூரியனில் நடந்தது. நாணயச்சுழற்சியில் தென்னாபிரிக்கா களத்தடுப்பிற்குத் தெரிவானது இங்கிலாந்து அணியின் விக்கெட்டுகள் மளமளவென சரிந்தன.

## கிரிக்கெட்டில் பல புதிய நுணுக்கங்களை சச்சின் கங்குலியிடமிருந்து கற்றுக்கொள்ளலாம்

**-இன்சமாம் புகழாரம்-**

இந்தியப் பயணம் வருவதற்கு முன்னதாகவே, இந்திய அணி, வீரர்கள் பற்றி புகழ்ந்து தள்ளுகிறார் இன்சமாம் உல்ஹக். பாகிஸ்தான் கிரிக்கெட் அணித்தலைவர் இன்சமாம் விளம்பரப் படத்தில் நடிக்க கொல்கத்தா வந்திருந்தார். மூன்று டெஸ்ட், ஐந்து ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்பதற்காக அவரது அணி 25ம் திகதி இந்தியா வருகிறது. இந்தத் தொடர் பற்றி இன்சமாம் அளித்தப் பேட்டி சச்சின் இன்னும் காயத்தில் இருந்து முழுமையாகக் குணமடையவில்லை என்று கேள்விப்பட்டேன். கிரிக்கெட் ரசிகர்களால் அதிகம் எதிர்பார்க்கப்படும் தொடர் இது. ஆகவே, 50 சதவீதம் குணமடைந்து விட்டால் கூட, அவர் கட்டாயம் விளையாட வந்து விடுவார் என்று நம்புகிறேன். அணியில் அவர் இருப்பதே இந்திய வீரர்களுக்குத் தனிப்பலம்தனி நபராக பல போட்டிகளில் எங்களை அவர் தோற்கடித்திருக்கிறார். ஒவ்வொரு முறை சச்சின் துடுப்பாட்டம் செய்யும் போதும், பலபுதிய விஷயங்களை, துடுப்பாட்ட நுணுக்கங்களை அவரிடம் இருந்து கற்றுக் கொள்ளலாம். கிரி க்கெட்டைப் பொறுத்த வரை அவர் மிகச்சிறந்த ஆசிரியர். நான் பார்த்து வியக்கும் மற்றொருவர் சவுரவ் கங்குலி. இப்போதைக்கு உலகின் மிகச்சிறந்த தலைவன் யாரென்று கேட்டால், தயக்கமே இன்றி அவரைத் தான் சுட்டிக் காட்டுவேன். இந்திய வீரர்களுக்கு தன்னம்பிக்கை அளித்து, அவர்களை வினைஞர்களாக்கியதில் சவுரவ் .பங்கு முக்கியமானது.





சுனாமி நிவாரண நிதி திரட்டுவதற்காக அரசு கண்காட்சி கிரிக்கெட் போட்டி நடத்துகிறது. சுனாமி அலைகளால்சேதமடைந்த காலி கிரிக்கெட் மைதானத்தில் இந்தப் போட்டி நேற்று முன் தினம் நடந்தது. சுனாமியில் உயிர் தப்பியவர்கள், சிறிலங்கா வீரர்கள் இடையே போட்டி நடந்தது. போட்டி துவங்கும் முன்னதாக, இலங்கை தலைவர் மார்வன் அட்டப்பட்டு (வலது ஓரம்) நிற்பதனைக்காணலாம்.

## மட்டக்களப்பில் ஆழி அனர்த்தத்தால் பாதிப்புற்ற மக்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் உதவி

(மாறன்)

கல்லடி உப்போடை சுனாமியால் பாதிக்கப்பட்ட இரண்டு கிராமங்களைச் சேர்ந்த மக்கள் அனர்த்தத்திற்கு பின்னர் பாடசாலைகளில் தங்கவைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து இம்மக்களை தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினர் பொறுப்பெடுத்ததுடன் நின்று விடாது சத்துருக்கொண்டானில் சுவிஸ் தமிழ் கிராமம் என்ற பெயரில் 120 குடும்பங்களுக்கு தற்காலிக கொட்டகைகள் அமைத்துக் கொடுத்து குடியமர்த்தியுள்ளதுடன் அவர்களுக்கான மருத்துவ வசதிகள், கழிப்பறை வசதிகள்,தண்ணீர் வசதிகள் என்பவற்றை தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் சீசர் தலைமையிலான குழுவினர்மேற்கொண்டு வருகின்றனர்.

இங்கு குடியமர்த்தப் பட்டுள்ள எங்களை அரசோ, அரச சார்பற்ற நிறுவனங்களோ இதுவரை எங்களுக்கு எவ்வித உதவியும் வழங்காத இந்நிலையிலேயே எங்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரே பாதிக்கப்பட்ட நாளில் இருந்து இது வரைக்கும் சகல வசதிகளையும் மேற்கொண்டு வருகின்றனர். என சுவிஸ் தமிழ்க்கிராமத்தில் குடியமர்த்தப்பட்ட மக்கள் ஈழநாதத்திற்கு தெரிவிக்கின்றனர்.

இதேவேளை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் இன்னுமொரு பகுதியில் மட்டக்களப்பில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களை குடியமர்த்த திராய் என்னும் இடத்தில் 250 ஏக்கர் காணி துப்பரவு செய்யப்படுகின்றது. இந்தப் பாணியிலும் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினர் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பகிரதன் பற்றிய தகவல் அறிந்தோர் தொடர்பு கொள்ளவும்

.கடந்த வருடம் டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்திற்குப் பின்னர் அதாவது 28ஆம் திகதி கொழும்பு கட்டுநாயக்காவில் இருந்து மட்டக்களப்பிற்கு பயணிகளை ஏற்றிச் சென்ற பின்னர் மட்டக்களப்பிலிருந்து 28ம் திகதி பிற்பகல் 5 மணியளவில் கொழும்புக்கு திரும்பிய எனது மகனான கந்தையா பகிர தன் (வேன்சாரதி) அவரின் உதவியாளர் செல்வராசா துஸ்யந்தன் ஆகிய இருவரும் இதுவரை வீடு வந்து சேரவில்லை என அவர்களது உறவினர்கள் ஈழநாதத்திற்கு அறியத்தந்துள்ளனர்

எனவே இவர்களைப் பற்றிய தகவல் அறிந்தவர்கள் 07769 60662 அல்லது 024-2223668 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறியத்தரவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.




இயற்கையின் கோரத்தாண்டவத்தால் அழிந்து போயுள்ள எமது துயரத்தில் இன்னலுற்றிருக்கும் எமது உறவுகளின் குரலிது.

எம்முறவுகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அவசர மனிதாபிமானப் பணிகள், அறிவுறுத்தல்கள், ஆலோசனைகள் என்பவற்றை தாங்கி தினமும் வெளிவருகின்றது.

நீங்கள் எதிர்நோக்கும் கஷ்டங்கள், உடனடித் தேவைகள் என்பவற்றை எமக்குத் தெரியப்படுத்தவும். மேலும் நீங்கள் எமக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்பும் தகவல்கள், தெரிவிக்க விரும்பும் செய்திகள் என்பவற்றையும் எமக்கு அறியத்தரலாம் .முடிந்தவரை அவற்றை வெளிக்கொணர்ந்து தீர்வு காண முயற்சிப்போம்.

## வவுணதீவு மணல்பிட்டி வீதிக்கு பஸ்தரிப்பிடம் அமைத்துத் தாருங்கள்

மட்டக்களப்பிலிருந்து வவுணதீவு ஊடாக மணல்ப்பிட்டி பிரதான வீதிவழியாக முனைக்காடு வரையும் ஒரு நாளைக்கு மூன்று தடவை நியூஈஸ்ரன் பஸ்கம்பனியினரால் பஸ்சேவை நடைபெறுவது யாவரும் அறிந்த விடயமே. ஆனால் இந்த பஸ்சை எதிர்பார்த்து மணல்பிட்டி வீதியில் இருந்து வவுணதீவு வரையிலான வீதி ஓரத்தில் நூற்றுக்கணக்கான படுவான்கரை மக்கள் கொட்டும் மழையிலும் , கொழுத்தும் வெயிலிலும் காத்திருந்து பஸ் பயணத்தை தொடர்கின்றனர். இவ் வீதியில் புதுமண்டபத்தடி பொதுச் சந்தைக்கு அண்மையில் மாத்திரமே மண்முனை மேற்கு பிரதேச சபையினரால் அமைக்கப்பட்ட ஒரேயொரு பஸ் தரிப்பிடம் இருக்கின்றது. வவுணதீவூடாக வரும் மணல்பிட்டி பஸ்கள் குறித்த நேரத்திற்கு வருவதில்லை இதன்போது பஸ் வரும் வரையும் பயணிகள் காத்திருப்பதற்கு இவ் வீதியில் மரநிழல்கள் கூட இல்லை எனவே குறித்த அதிகாரிகள் இதனைக் கவனத்திற்கொண்டு பஸ் தரிப்பிடமின்றி அவதியுறும் எங்களுக்கு உதவுமாறு பஸ்பிரயாணிகள் ஈழநாதம் உதவிக்கரம் பகுதியூடாக கோரிக்கை விடுக்கின்றனர்.



பொத்துவில் பகுதியில் வசதியான வீடுகளில் வசித்து வந்த குடும்பங்கள்சுனாமியின் தாக்கத்தால் வெளிநடமாட்டமின்றி மனவிரக்தியுடன் கூடாரத்திற்குள் முடங்கிக் கிடப்பதனையும்,நலன்புரி நிலையமொன்றில் பெண்கள் உணவு தயாரிக்கும் காட்சியினையும் படத்தில் காணலாம்.

(படமும் தகவலும் :-வி. பி சிவப்பிரகாசம்)

## சிந்தனைக்கு



நாம் ஒரு இலட்சிய விதையை விதைத்திருக்கின்றோம்., அதற்கு எமது வீரர்கள் இரத்தத்தைப் பாய்ச்சி வளர்க்கின்றோம். இந்த விதை வளர்ந்து விருட்சமாகி எமது மாவீரர்களின் கனவை நனவாக்கும்.

**தமிழீழத் தேசியத் தலைவர்**

ஈழநாதம்
கிழக்குப்பதிப்பு EEZHANATHAM
பிரதான வீதி, கொக்கட்டிச்சோலை.
மின்னஞ்சல் : batti@eezhanatham.com
தொலைபேசி : 065-2226110
15-02-2005

# பலவீனப் படுத்தல் என்பது பகற்கனவு

விடுதலைப்புலிகளை பலவீனப்படுத்தலாம் என நினைப்பதோ அல்லது புலிகளுக்கு எதிராகத் தாக்குதல் நடாத்தி போராட்டத்தை சிதைக்கவோ எந்த சக்தியாலும் முடியாது. அவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் ஈற்றில் முட்டாளாக வேண்டிய நிலையே ஏற்படும்.

அண்மையில் மட்டு அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் மீது எதிரிகள் இலக்கு வைத்து தாக்குதல் நடாத்தியிருந்தனர். கேணல் கௌசல்யன் எதிரிகளின் நயவஞ்சகத் தனமான தாக்குதலில் வீரகாவியம் படைத்தாலும், போராட்டம் சிதைந்து விடப் போவதில்லை.

மட்டு அம்பாறை மக்களிடையே தவறான பிரசாரங்களைப் புகுத்தி அவர்களை தன்வயப்படுத்த பேரினவாத அடிவருடிகள் கருதுவார்களாயின் அது முடியாத விடயம்.

விடுதலை வரலாற்றில் லெப். கேணல் கௌசல்யனின் இழப்பு ஈடுசெய்ய முடியாத இழப்பு. மிகப் பெரிய ஒரு வீரனை இழந்து தமிழர் தாயகம் மட்டுமல்ல புலம்பெயர்வாழ் உறவுகளும் அழுது புலம்பிக்கொண்டிருக்கின்றனர். ஆனால் விடுதலைப்புலிகளின் போராட்டத்தைத் துளியளவும் சிதைக்கவோ, பலவீனப்படுத்தவோ எந்த சக்திகளாலும் முடியாது.

மாற்று நடவடிக்கைகள் வேகமாக முன்னேடுத்துச் செல்லப்படுமென்பதை தாக்குதலாளிகள் புரிந்து கொள்ள வேண்டும்.

தற்போது மட்டு அம்பாறை மாவட்டத்திற்கு புதிதாக ஒரு அரசியல் துறைப் பொறுப்பாளர் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் லெப். கேணல் கௌச ல்யனின் பணிகளை முன்னெடுத்துச் செல்வார். கௌசல்யன் அவர்கள் மட்டு அம்பாறை மாவட்டத்தில் தமது அரசியல்துறையூடாக எத்தகைய சேவைகளை, எதிர்பார்ப்புக்களைக் கொண்டிருந்தாரோ அது பல மடங்கு வேகத்தில் முன்னெடுக்கப்பட வேண்டும்.

அதே வேளை தமிழீழ துறைசார் பொறுப்பாளர்கள் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு வருகை தந்துள்ளனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டு அம்பாறை சிறப்புத் தளபதி கேணல் பானு, தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வன் ஆகியோர் இந்த கலந்துரையாடலில் மட்டு அம்பாறை மாவட்டங்களுக்கு ஆற்றவேண்டிய சேவை தொடர்பாக துறைசார் பொறுப்பாளர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டனர். இக்கலந்துரையாடலில் மட்டு அம்பாறை துறைசார் பொறுப்பாளர்களும் கலந்து கொண்டனர்.

கொக்கட்டிச்சோலை மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் மூலமான செயற்பாடுகள் விரைவில் தென்தமிழீழ தேசத்து மக்களுக்கு நன்மை பயர்க்கும் என எதிர்பார்க்கின்றோம்.

இதுவரைகாலமும் இல்லாத வகையில் தமிழீழ துறைசார் பொறுப்பாளர்கள் ஒரே இடத்தில் கூடி இவ்வாறான ஒரு ஆய்வு நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதன் மூலம் மக்கள் நலத்திட்டங்கள் விரிவடைந்துள்ளது என்பது வெளிப்படை. ஞாயிறன்று விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினரான வே. பாலகுமாரன் அவர்கள் கொக்கட்டிச்சோலை மாவட்டச் செயலகத்தில் அரச உயர் அதிகாரிகளுடனான சந்திப்பில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார்.

நாங்கள் பலவீனப்படவில்லை எங்களுக்கு மாற்று அரசாங்கம் உள்ளது. மாற்று தேசியம் உள்ளது. எதுவித ஊழலுமின்றி ஒழுங்காக இயங்கிக்கொண்டிருப்பதாக குறிப்பிட்டிருந்தார்.

உண்மையில் விடுதலைப் புலிகளை எந்த சத்தியாலும் அழித்து ஒழித்து விட முடியாது. விடுதலைப் போரை அழிப்பது என்பது தமிழ் இனத்தை அழிப்பதற்கு சமமானது.

கௌசல்யன் மறைவின் பின் தமிழர் தாயகம் மட்டு மல்ல புலரம் பெயர் வாழ் உறவுகளின் உணர்வுகள் ஒவ்வொன்றையும் உற்று நோக்கின் மக்கள் விடுதலைப் போராட்டத்தில் கொண்டிருக்கும் பற்றுறுதியைக் காணலாம். ஒரு கௌசல்யனை எதிரிகளால் அழித்தால் ஆயிரம் கௌசல்யன்கள் உருவாகி விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வார்கள் என்பது உறுதி.

# லெப். கேணல் கௌசல்யன், மாமனிதர் நேரு ஆகியோருக்கு மெல்போனில் துக்கம் அனுஷ்டிப்பு

(நமது நிருபர்)

லெப். கேணல் கௌசல்யனினதும் சக போராளிகளினதும், மாமனிதர் சந்திரநேரு அரியநாயம் அவர்களினதும் நினைவுகூரும் நிகழ்சிக்கூட்டம் நேற்று முன்தினம் அவுஸ்திரேலியா மெல்போன் நகரில் மிகவும் உணர்வுபூர்வமாக நடைபெற்றது. ஈகைச்சுடரை பொனி இருதயநேசன் ஏற்றிவைத்தார். மாவீரர்களுக்கான மலர்மாலையை தமிழீழ விடுதலைப்புலிகளின் பொருளாதார மூலவள ஆலோசகர் கலாநிதி ஜோய் மகேஸ்வரன் அணிவித்தார்.

அதனைத் தொடர்ந்து பொதுமக்களின் மலர் வணக்கமும், அகவணக்கமும் நடைபெற்றன. லெப். கேணல் கௌசல்யன், மேஜர் புகழன், மேஜர் செந்தமிழன், 2ம் லெப். விதிமாறன் ஆகியோரின் இறுதிவணக்க நிகழ்வுகளின் ஒளி நாடா அகலத்திரையில் காண்பிக்கப்பட்டது.

இந் நினைவுகூரும் நிகழ்வில் சசிதரன், விமலன், கலாநிதி ஜோய் மகே ஸ்வரன் ஆகியோர் நினைவுரை ஆற்றினார்கள். தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் சபேசன் இந் நினைவுரைக்கூட்டதை ஒருங்கிணைத்து உரையாற்றினார். மிகக்குறுகிய காலத்தில் ஒழுங்கமைக்கப்பட்ட இந் நினைவுரைக்கூட்டத்திற்கு தேவாலய மண்டபம் நிறைந்தளவில் மக்கள் உணர்வு பூர்வமாகக் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# சங்கத் தொடர்பில் சிங்களம் தெரியாதவர்களுக்கு சங்கடம்

(நமது நிருபர்)

கல்வித் திணைக்கள ஊழியர் கூட்டுறவுச் சங்கத்தின் பெருமளவு அதிபர், ஆசிரியர்கள் அங்கம் வகிக்கின்ற போதிலும் சங்கத்துடனான கொடுக்கல், வாங்கல் மற்றும் சகல கருமங்களுக்கும் சிங்களம் தெரிவிக்க வேண்டியுள்ளது.

கொழும்பு கொள்ளுப்பிட்டியில் இயங்கிவரும் இச்சங்கத்தின் வடக்குக் கிழக்கு பிரதேசம் ஆசிரியர்கள் சென்று தமது கருமங்களை ஆற்ற முடியாதவாறு சிங்கள மொழிப் பிரச்சினையுள்ளது.

தமிழ் மொழியில் கருமமாற்றக் கூடிய அதிகாரிகள் நியமிக்கப்படாமையும் அதனால் இருக்கின்ற அரைகுறை தமிழ் பேசும் சிங்களவர்களின் பாரபட்ச நிலையைக் கண்டு சங்கடப்படுகின்றவர்கள் நிறையவே உள்ளனர். அண்மையில் பெரியளவிலான நிதி மோசடிகளைச் செய்த இச்சங்கத்தின் முக்கிய விடயங்களை ஜனாதிபதி தமது விசேட அதிகாரியின் கட்டுப்பாட்டில் கொண்டு வந்த இச்சங்கத்தின் கடமைகளைச்சரிவர விளங்கிக் கொள்ள முடியாதவர்களாக உள்ள ஆசிரியர்களின் அவலத்தைப் போக்க இச்சங்கம் சரியான வழிகளைக்கையாள வேண்டும்?

# அரச தாபரிப்பு பணம் பெறுவோர் கனகசபை எம்.பியின் வீட்டின் முன் ஆர்ப்பாட்டம்

(கல்லடி நிருபர்)

பட்டிருப்புப் பிரதேச அரசாங்க தாபரிப்புப் பணம் பெறுவோர் தமக்குக் கடற்பேரலை அனர்த்த நிவாரணம் வழங்கப்படாமையைக் கண்டித்து மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் த.கனகசபையின் வீட்டின் முன் நூற்றுக்கணக்கான தாபரிப்புப் பணம் பெறுவோர் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது அவர்களால் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: கடந்த கடற்பேரலை அனர்த்தத்தால் பட்டிருப்புத் தொகுதியில் வாழும் நாம் பல்வேறு வகைகளில் பாதிக்கப்பட்டிருந்தோம். உதவு தொகை பெறும் காரணத்தினால் எமக்கு நிவாரண முத்திரைகளோ, நிவாரண உதவிகளோ இதுவரை வழங்கப்படவில்லை. தாபரிப்புப் பணத்தினைப் பெற்று நாம் இழந்த சொத்துக்களையோ, பொருளாதாரத்தினையோ கட்டியெழுப்ப முடியாது. இவ்வாறு அவ்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களின் கோரிக்கைகளை செவிமடுத்த கனகசபை எம்.பி. உங்களின் கோரிக்கை நியாயமானது. இவ்விடயம் தொடர்பாக உரிய அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு உரிய தீர்வைப் பெற்றுத் தருவதாக உறுதியளித்தார். இவ்வுறுதிமொழிகளைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டக் காரர்கள் கலைந்து சென்றனர்.

# சம்பள முற்பணக் கடன் விண்ணப்பம் கோரல்

(இ.மகேசன்)

கடந்த சுனாமி அனர்த்தம் மூலம் பாதிக்கப்பட்டு வீடுகளையோ அல்லது வீட்டுப்பாவனைப் பொருட்களையோ இழந்த அரச ஊழியர்களுக்கான அரசின் நிவாரணமான பன்னிரெண்டு மாத கடன் முற்பணம் பெற்றுக் கொள்ள விரும்பிய பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கான விண்ணப்பங்களை உடனடியாக சமர்ப்பிக்குமாறு கல்குடா கல்விவலயப் பணிமனை கோரியுள்ளது.

கடந்த 2004ம் வருடம் 11ம் மாதம் பெற்றுக்கொண்ட சம்பளத்தின் 12 மாதத் தொகையை வட்டியற்ற முற்பணக் கடனாகப் பெறலாம்.

இது அறுவது மாதத்தினுள் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

# பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் மீள் கட்டுமானப் பணிகள் மந்த கதியில்

(இ.மகேசன்)

கடந்த சுனாமி அனர்த்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீண்டும் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளை அரசு பெருமளவு நிதியினைக் கொண்டு ஆரம்பித்துள்ள போதிலும் வடகிழக்கில் இந்நடவடிக்கைகள் மிக மந்த கதியிலேயே இடம் பெறுகின்றது. தென்பகுதிகளில் மீள் கட்டுமானப் பணிகளான வீதிகள், பாடசாலைகள், வீட்டுத்திட்டங்கள் எனப் பல செயற்றிட்டங்களும் மிகவேகமாகவே நடைபெறுகின்ற போதிலும் அதேயளவு வேகமும் அக்கறையும் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களைப் புனரமைப்பதில் காட்டப்படவில்லை எனக் கவலையடைகின்றனர். நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள பாதிக்கப்பட்ட மக்கள் நிவாரணப் பொருட்களும், கொடுப்பனவுகளும் வழங்குவதிலேயே மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கும் அரச அதிகாரிகள் தென் மாகாணத்திலுள்ள அரச அதிகாரிகளின் வேகத்தையும் அவர்களின் மீள்கட்டுமானப் புனரமைப்புப் பணிகளின் திட்டமிடல்களையும் கண்டு கொள்ளவில்லையா? எனவும் இப்பாதிக்கப்பட்ட மக்கள் கேட்கின்றனர்.

எவ்வளவு வசதியுடன் வாழ்ந்த நாம் இன்று அதிக முகாம்களில் முடங்கிக்கிடக்கின்றோம். எப்போது எமக்கு விடிவு கிடைக்குமோ என இவர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

# கௌசல்யன், மாமனிதர் நேரு படுகொலையை கண்டித்து பேரணி

(நமது நிருபர்)

பொலநறுவை, வெலிக்கந்த வீதியில் கடந்த 07 ஆம் திகதி மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் உட்பட நான்கு போராளிகளும் மாமனிதருமான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேருவும் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து கிளிநொச்சியில் மாவட்ட ரீதியான கண்டனப்பேரணி இன்று நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட வெகுசன அமைப்புக்களுடைய ஒன்றியம் இதனை ஏற்பாடு செய்துள்ளது. இக்கண்டனப் பேரணிகள் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தடியிலிருந்தும், கந்தசுவாமி கோவிலடியிலிருந்தும் இரு பிரிவுகளாக ஆரம்பித்து போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவின் காரியாலயத்தில் முடிவடையும். மனு கையளிப்பை தொடர்ந்து அங்கு கண்டனக் கூட்டம் நடைபெறும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். இதேநேரத்தில், கிளிநொச்சி மாவட்ட உதைபந்தாட்டச் சங்கம் கௌசல்யன் குழுவினர் மீதான படுகொலையினை வன்மையாகக் கண்டித்து இலங்கை ஜனாதிபதிக்கு மனு ஒன்றினை அனுப்பிவைத்துள்ளது.

இக்கொலையை கண்டித்து யாழ்ப்பாணம், மன்னார் வவுனியா ஆகிய இடங்களிலும் கண்டனப்பேரணிகள், பணிப்புறக்கணிப்பு நடை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விண்ணப்பம் கோரல்

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மெக் அமைப்புடன் மேற்கொண்டுவரும் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் திட்டத்திற்கு கண்ணிவெடி அகற்றுனர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. எனவே இப்பதவிக்கு விண்ணப்பங்களை அனுப்ப விரும்புவோர் எதிர்வரும் 18 02.05 திகதிக்கு முன்னர் தங்களது விண்ணப்பங்களை மெக் திட்ட இணைப்பாளர், தமிழர் புனர்வாழ்வுக் கழகம், இல.07, டயஸ் வீதி மட்டக்களப்பு எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

ஈழநாதம்
Eezhanatham
மட்டக்களப்பு பதிப்பு மக்கள் நாளிதழ்

# விடுதலைப்புலிகள் 121ஆவது குரல் இன்று வெளிவருகிறது

(நமது நிருபர்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடான விடுதலைப்புலிகள் பத்திரிகையின் மார்கழி - தை மாதத்திற்குரிய 121வது குரல் சமாதானத்தைக் குழப்பியடிக்கும் படுகொலை முயற்சிகள், இயற்கை அழிவிலும் இனவாதச் சிந்தனை என்ற முகப்புச் செய்திகளுடன் இன்று.(15.02. 2005) வெளிவருகின்றது.

**விடுதலைப் புலிகள் ....**

சேர்ந்து தங்களுடைய உயிர்களையும் இழந்திருக்கலாம். ஆனால் பெரும்பாலானவர்கள் உங்களோடு சேர்ந்து இந்தப் போராட்டத்தில் குதித்தவர்கள் அல்ல. சமபங்கை வகித்தவர்கள் அல்ல இவ்வாறு காத்தான்குடி பள்ளிவாயல், முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனப் பிரதித்தலைவர் ஏ.எல்.அப்துல் ஜபாத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் எந்தவொரு காலகட்டத்திலாவது 'முஸ்லிம் சமூகம் தங்களது சமூகத்தின் விருப்புக்கு அமைய தமிழ்ச் சகோதரர்களை காட்டிக் கொடுத்தவர்களாக ஒரு போதும் இருந்தவர்கள் அல்ல. இந்த நாட்டினுடைய பெரும்பான்மையினம் தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடையில் ஒரு பிரிவை ஏற்படுத்துவதன் மூலமாக அதிலே பலவீனத்தை ஏற்படுத்த முற்பட்டு முஸ்லிம்களை பயன்படுத்த முற்பட்ட கால கட்டமும் இருந்தது. முஸ்லிம்கள் துரோகிகளாக மாறிக் காட்டிக் கொடுப்பவர்களாக செயற்பட்டவர்கள் அல்ல.

ஒரு சில விதி விலக்குகள் இருந்திருக்கலாம். அது ஒரு சமூகத்தோடு தொடர்புடைய சம்பவங்கள் அல்ல. நாங்கள் விடுதலைப்புலிகளோடு அல்லது தமிழ் மக்களோடு சேர்ந்து அடக்கப்பட்டவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள். இருந்தாலும் கூட அந்தப் போராட்டத்திலே நாங்கள் இறங்கியிருக்க வேண்டும். ஆனாலும் இறங்கவில்லை. அதற்கு உறுதியான ஒருகாரணம் இருக்கின்றது. முஸ்லிம்களைப் பொறுத்த அளவிலே அவர்கள் இந்த நாட்டிலே எல்லாப் பிரதேசங்களிலும் எல்லா மாவட்டங்களிலும் வாழ்கின்றார்கள்.

மிகக் குறைந்த அளவு மட்டத்திலேதான் வடக்கு கிழக்குப் பிரதேசத்திலே வாழ்கின்றோம். எனவே எங்களுடைய அந்த உணர்வுகள், செயல்கள் வெளி மாவட்டங்களிலே வாழ்கின்ற முஸ்லிம் சகோதரர்களை மிக வெகுவாகப் பாதிக்கும் என்ற காரணங்களால் தான் உணர்வு அடக்க வேண்டிய நிலை காணப்பட்டது. எனவே இந்த மண்ணைச் சேர்ந்த மக்கள் உங்களைச் சகோதரர்களாகக் கொள்பவர்கள் இங்கே இருக்கின்ற மக்களோடு அன்றாட வாழ்க்கைகளை வளர்த்துக் கொண்டிருப்பவர்கள். பணிவான கோரிக்கையினையும் இவ் வேளையில் நாங்கள் சமர்ப்பிக்கின்றோம். எங்களையும் இத் தாயகத்திலே சமமான முறையில் வழி நடாத்த வேண்டும் என்பதே அந்தக் கோரிக்கையாகும் என்றார்.

**சிங்களப் பேரினவாத....**

செல்வன் தெரிவித்தார். மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட முஸ்லிம் பிரதிநிதிகளுக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான இச்சந்திப்பு நேற்று காலை கொக்கட்டிச்சோலை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட முஸ்லிம் பிரமுகர்கள் கலந்து கொண்ட இச்சந்திப்புக்கு மட்டு அம்பாறை அரசியல் துறை பொறுப்பாளர் இளந்திரையன் தலைமை வகித்தார்.

மட்டு அம்பாறை சிறப்புத் தளபதி கேணல் பானு, நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரராசசிங்கம் ஆகியோர் கலந்து கொண்ட இச்சந்திப்பில் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தொடர்ந்து பேசுகையில்

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் போராட்ட சூழலில் பெரியதொரு யுத்தத்திற்கும் இன அழிப்பிற்கும் முகம் கொடுத்துக்கொண்டிருக்கின்ற வேளையிலே அதிலே எங்களது முழுக் கவனத்தையும் கரிசனையையும் செலுத்த வேண்டியவர்களாக இருந்தோம். அந்தக் கட்டத்தில் எங்களது சமூகங்களின் மத்தியிலுள்ள உறவுகளை கட்டியெழுப்புகின்ற ஒரு சூழல் உருவாகவில்லை.

ஆனால் இந்த யுத்த நிறுத்தம் ஏற்பட்டவுடனேயே தலைவர் உடனடியாகச் செய்தது முஸ்லிம்களின் தலைமையை அழைத்துப் பேசி புரிந்துணர்வுக்கு வந்து அந்த மக்கள் மத்தியில் ஒரு நம்பிக்கையை கட்டியெழுப்புகின்ற பல முடிவுகளை எடுத்து நடைமுறைப்படுத்த வேண்டுமென்பது தான் எமது தலைவருடைய முதற்கட்டப்பணியாக இருந்தது. ஆகவே இந்த ஒரு விடயத்தை வைத்துக் கொண்டே எங்களுடைய தலைவருடைய நிலைப்பாட்டை தெளிவாகப் புரிந்துகொள்ளலாம்.

ஆனால் நாங்கள் தீர்மானங்களை எடுத்து முஸ்லிம்கள் மத்தியில் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப எடுத்த முயற்சிகள் துரதிஷ்டவசமாக இரண்டு தரப்பிலும் ஏற்பட்ட நடைமுறை பிறள்வுகள் காரணமாக அதைக் கட்டியெழுப்புகின்ற முயற்சி சற்றுத் தாமதமாகி விட்டன. ஆயினும் தமிழ் முஸ்லிம் மக்களுடைய ஒற்றுமையும் கூட்டுமுயற்சியும் சேர்ந்த அர்ப்பணிப்பு உருவானால் தான் எங்களுடைய தாயகத்தினுடைய உரிமையை வென்றெடுக்கலாம்.

அதிலே எங்களுடைய தலைவர் மிகத் தெளிவாக இருக்கின்றார். எங்களுக்குள் முன்னைய காலத்தில் சில பிரச்சினைகள் வந்திருக்கலாம் எங்களுடைய தலைவர் பல இறுக்கமான கட்டளைகளை பணிப்புக்களை வழங்கியிருந்தாலும் கடந்த காலங்களிலே நிர்வாகத்திற்குப் பொறுப்பாக இருந்த சில தலைமைகள் அதை முழு அளவில் அனுசரித்துப் போனதாக எங்களால் சொல்ல முடியாது.

எங்களுடைய தலைவர் மனதிலே மிக ஆழமாக உறுதியான உறுதிப் பாடு இருக்கின்றது. இந்த தேசத்திலே தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து எதிர்காலத்தை நோக்கி முன்னேறிக் கொண்டு போவதன் ஊடாகத்தான் தாயகத்தை மீட்டெடுக்கலாம். நாங்கள் அனை வரும் மகிழ்வாக வாழக்கூடிய ஒரு சூழல் இங்கு உருவாகும் அதிலே மிகவும் உறுதியான நிலைப்பாட்டை க் கொண்டிருக்கிறோம்.

கடந்த காலங்களில் சில முரண்பாடுகள், நெருக்கடிகள் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் நிச்சயமான உறுதியான நிலைப்பாடு என்பது ஒன்றுதான். அதில் எந்தவிதமான மாற்றமும் இல்லை.

தொடர்ந்தும் மாற்றங்கள் வந்தாலும் எங்களுடைய தலைமைப் பீடத்தினுடைய நிலைப் பாடுகளைத் தொடர்ந்தும் தாயகப் பிரதேசத்தினுடைய அனைத்துப் பகுதிகளிலுமே அதை நடைமுறைப்படுத்துவது தான் இறுக்கமான கொள்கையாகவும், நிலைப்பாடாகவும் இருக்கிறது.

கௌசல்யனை நாங்கள் இழந்தாலும் அவர் எடுத்த முயற்சிகள் தொடர்புகள், முடிவுகள், எல்லாமே தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதற்கு இந்த மாவட்டத்திலே புதிதாகப் பொறுப்பெடுத்திருக்கின்ற நிர்வாகம் மிகச் சிறப்பாக அதைக் கொண்டு செல்லும். அதிலே நீங்கள் அச்சப்படவோ சந்தேகப்படவோ தேவையில்லை.

கடந்த காலங்களில் தமிழ் முஸ்லிம் மக்கள் மிக இறுக்கமாக இருந்தார்கள். நல்லுறவோடு இருந்தார்கள் ஆனால் எங்கள் மீதும், எங்கள் தேசத்தின் மீதும் ஒரு இன அழிப்புப் போர் தொடங்கிய பின்பு தான் முஸ்லிம் தமிழ் மக்கள் மத்தியில் இருந்த உறவுகள் படிப்படியாக விரிவடையத் தொடங்கியது. இது பேரினவாதிகளின் நீண்ட காலமாக மேற்கொண்ட சதி முயற்சிதான்.

ஏனெனில் நாங்கள் ஒன்றாக இருந்தோம். சில தாயகக் கோட்பாடு தமிழ் முஸ்லிம் மக்கள் ஒன்றாகச் சேர்ந்து தாயகத்திலே அரசியல் உரிமைகளைப் பெற்றுவிடுவார்கள் என்ற ஒரு அச்சம் காரணமாக மக்கள் மத்தியிலே பிரித்தாளும் தந்திரத்தை அவர்கள் கையாண்டார்கள் அதன் முதல் படி தமிழ் முஸ்லிம் மக்கள் மத்தியிலே உறவை பிளப்பது. சூழ்நிலை காரணமாக போர்ச்சூழலிலே ஒரு விடுதலை அமைப்பு உடனடி அமைப்பு பெரிய பெரிய பாரிய கட்டமைப்பாக மாறி முழுமக்களையும் திரட்டி உரிமைப் போராட்டத்தை முன் கொண்டு செல்வதுடன் உடனடியாக சாத்தியமில்லை. எங்களுடைய கொள்கைகள் ஒரு நிலைப்பாடாக இருந்தாலும் படிப்படியாக எங்களுடைய விடுதலை அமைப்பு எங்களுடைய தலைவர் தனியொரு மனிதராக வெளிக்கிட்டு ஐந்து பேர், பத்துப் பேர் நூறு, இருநூறாக மாறித்தான் இன்றைக்கு பல்லாயிரக் கணக்கான வீரர்களைக் கொண்ட பெரும் படையணியாக பெரிய கட்டமைப்பாக மாறி ஒரு தேசத்தையே நிர்வாகிக்கின்ற விடுதலை அமைப்பாக நாங்கள் மாற்றமடைந்திருக்கின்றோம் என்றார்.

இந்தக் கலந்துரையாடலில் தமிழீழ மகளீர் அரசியல் துறைப பொறுப்பாளர் தமிழினி, மாவடி முன்மாரிக் கோட்ட இராணுவத் தளபதி ரமணன் மற்றும் பொன்.தியாகம் ஆகியோர் புலிகளின் சார்பில் கலந்து கொண்டனர்.

முஸ்லிம்கள் சார்பில் ஓட்டமாவடி, ஏறாவூர், காத்தான்குடி மற்றும் அம்பாறை மாவட்ட பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர். சட்டத்தரணி ஏ.எம். அப்துல் ஜபாத் காத்தான்குடி பிரதித்தலைவர் பள்ளிவாசல்கள், முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனம் ஐ.எம். இப்றாகிம் முன்னாள் சம்மாந்துறை பிரதேசசபை செயலாளர், அனைத்து பள்ளிவாயல் சம்மேளனத் தலைவர், எம்.வை. அப்துல் காதர், மத்திய சபைத் தலைவர் ஏறாவூர், அகமது லெவ்வை அட்டாளைச்சேனை ஜும்மா பள்ளிவாயல் தலைவர், அப்துல்லா கற்குடா தொகுதி பள்ளிவாயல்கள் சம்மேனத் தலைவர் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.


**முஸ்லிம்களின்......**

கலந்து கொண்டு உரையாற்றிய சம்மாந்துறை பிரதேச சபை முன்னாள் செயலாளர் ஐ.எம்.இப்றாகிம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:- தமிழ் முஸ்லிம் மக்கள் பல்வேறு வழிகளில் இந்தச் சிறிலங்கா அரசினால் காலத்திற்கு காலம் புறக்கணிக்கப் பட்டு வருகின்றனர். உதாரணமாக அண்மையில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தின் போது அம்பாறை மாவட்டத்தில் இது வரை எந்தவித நிவாரண உதவிக ளோ வழுங்கப்படவில்லை. இதனால் நாங்கள் அரசுக்கு எதிரான பல போராட்டங்களை, ஆர்ப்பாட்டங்களை ஆரம்பிக்கத் தொடங்கினோம் என்றார்.

# அமெரிக்கக் கப்பல் குலூத் காலியை வந்தடைந்தது

அமெரிக்கக் கப்பலான குலூத் ஞாயிறு காலியை வந்தடைந்துள்ளது. இதில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கான வெளிநாட்டு உதவிகள் கொண்டு வரப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் கலிபோர்னியாவில் இருந்து புறப்பட்ட இக்கப்பலில் மீட்பு கட்டுமான உபகரணங்களும் நூற்றுக்கு மேற்பட்ட நிவாரணப் பணியாளர்களும் கொண்டு வரப்பட்டுள்ளனர். இக்கப்பலில் ஈருடகப் போக்குவரத்துக்கான சாதனங்களைக் கொண்டிருப்பதுடன் துருப்பினரைக் கரையிறக்கவதற்கான தரையிறங்கு கலங்களையும் கொண்டுள்ளது. இக்கப்பல்கள் தரையிறக்க நடவடிக்கைகளுக்கு மட்டுமன்றி மனிதநேய உதவிப்பணிகளை மேற்கொள்ளப்படக் கூடியவையாயும் அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் CH-46E சீ நைற் ரக கெலிகொப்ர்ரகள் மூன்றினையும் இக்கப்பல் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.



இதேவேளை 1000 அமெரிக்க மரைன் படையினரும் நிவாரண உதவி உபகரணங்களுடனும் இலங்கைக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ள "லொன்கோம் றிச்சாட்ஸ்" என்ற அமெரிக்காவின் படைக்கப்பல், பின்னர் சுமத்திராநோக்கி அனுப்பப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

**கௌசல்யன்......**

தக சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இப்பேரணி கொக்கட்டிச்சோலை சந்தியிலிருந்து ஆரம்பமாகி பட்டிப்பளை பிரதேச செயலகம்வரை செல்லவுள்ளது. அங்கு பிரதேச செயலாளரிடம் மகஜரொன்றும் கையளிக்கப்படவுள்ளது. அம் மகஜரில் பிரதிகள் தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும், நோர்வே அனுசரணையாளர்களுக்கும் கையளிக்கப்படவுள்ளன.

**அக்கரைப்பற்றில்......**

அப்போது அங்கிருந்த ஆண் போராளிகள் பெண் போராளிகளை பெண் பொலிசாரே சோதனையிட வேண்டும் எனக் கூறினர். இதனால் சிறிது நேரம் வரை விசேட அதிரடிப் படையினருக்கும், விடுதலைப்புலிப் போராளிகளுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது.

பின்னர் காரைதீவிலிருந்து வருகை தந்த பெண் விசேட அதிரடிப் படையினரால் பெண் போராளிகள் சோதனைக்குட் படுத்தப்பட்டனர். சுமார் இரண்டரை மணித்தியாலயங்கள் வரை இவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**சிட்னி நகரில்......**

ன்ட்டின் சகோதரர் களுவாஞ்சிக்குடி யோகனும், வீரவேங்கை குட்டி ஜெமினின் தயார் திருமதி சுப்பிரமணியமும், மேஜர் டயஸ் கந்தசாமியின் சகோதரன் தனபாலும், மேஜர் வள்ளுவின் சகோதரி பத்மினி சோதிராசாவும் ஈகைச்சுடர் ஏற்றிவைக்க பொதுமக்களின் மலர் வணக்கமும் நடைபெற்றது.

தென் துருவ தமிழ்ச் சங்க சம்மேளனத் தலைவர் அனா பரராஜசிங்கமும் சிட்னி தமிழர் ஒருங்கிணைப்புக் குழு பணியகத்தின் சார்பில் தனபாலும், நியூ சவுத் வேல்ஸ் தமிழ் அமைப்புக்களின் ஒன்றியத்தின் சார்பாக அதன் செயலாளர் ஜேம்ஸ் சுகுமாரும், திருமதி பத்மினி சோதிராசாவும் உரையாற்றினார்கள். களுவாஞ்சிக்குடி யோகன் கவிதை வாசித்தளித்தார்.

இதனைத் தொடர்ந்து கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற லெப். கேணல் கௌசல்யன், மேஜர் புகழன், மேஜர் செந்தமிழன், 2ம் லெப். விதிமாறன் ஆகியோரின் இறுதிவணக்க நிகழ்வுகளின் ஒளிநாடா அகலத்திரையில் காண்பிக்கப்பட்டது.

மிகக்குறுகிய காலத்தில் ஒழுங்கமைக்கப்பட்ட இந்நினைவுரைக்கூட்டத்திற்கு மண்டபம் நிறைந்த மக்கள் உணர்வு பூர்வமாக கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

**வெல்லாவெளி ....**

மக்களின் ஏற்பாட்டால் நடாத்தப்பட்ட இந்த கண்டனப் பேரணி போரதீவு சந்தியிலிருந்து ஆரம்பமாகி வெல்லாவெளியூடாக பிரதேச செயலகத்தைச் சென்றடைந்து அங்கு மகஜர் ஒன்றும் பிரதேச செயலாளரிடம் கையளிக்கப்பட்டது. பல நூற்றுக் கணக்கான மக்கள் இந்தப் பேரணியில் கலந்து கொண்டனர்.

**கோமாரியில்......**

லையில் அனுமதிக்கப்பட்டு பின் திருக்கோவில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த வேளை உயிரிழந்துள்ளார்.

**அடையாளம் ....**

ர்ந்த இளையதம்பி கோபாலகிருஸ்ணன் 55 என்பவரே இவ்வாறு அடையாளம் காணப்பட்டவராவார்.

கடந்த சனிக்கிழமை விவசாய வேலைக்காகச் சென்ற வேளை காணாமல் போன இவரின் சடலம் நேற்று முன்தினம் எரிக்கப்பட்ட நிலையில் பொதுமக்களால் கண்டெடுக்கப்பட்டது.

பின்னர் திருக்கோவில் பிரதேச பொலிசார் கிராம சேவை உத்தியோகஸ்தர், இறந்தவரின் மகன் ஆகியோரின் உதவியுடன் நேற்று சடலம் அடையாளம் காணப்பட்டது.

இப்பத்திரிகை நித்தி பதிப்பகத்தால் 15.02.2005 அன்று அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.